# ஆய்த எழுத்து

தமிழியல் ஆய்வு இதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் - ISSN - 2278-7550

ஏப்ரல் – 2020

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550



visit us: www.pallavipathippakam.in

ISSN : 2278-7550

2278-7550

பல்லவி பதிப்பகம்

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

ISSN : 2278-7550

மலர் : 8 ஏப்ரல்-2020 இதழ் : 4



**பதிப்பாசிரியர்**

**நல் நடராசன்**

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549
97919 51549.

**பல்லவி பதிப்பகம்**

118, மேட்டூர் சாலை,
கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com



**EDITORIAL BOARD**

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavur.*
mcthiyagu@gmail.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gmail.com

**Dr.B.Sathiyamoorthy**
*Madurai Kamaraj University, Madurai.*
tamilkanikani@gmail.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Sankaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gmail.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Trichy.*
alibavapkm@gmail.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
arangantnou@gmail.com

**Dr.S.Kavitha**
*Tamil University, Thanjavur.*
skavithatamil@gmail.com

**Dr.Manonmanidevi Annamalai**
*Sulthan Itrecue Kalviyal University, Malaysia.*

**Dr.Paramasivam Muthuswamy**
*Malasyia University, Malasyia.*
mparam98@gmail.com

**ஆசிரியர் குழு**

**முனைவர் சி.தியாகராசன்**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
mcthiyagu@gmail.com

**முனைவர் க.இரமேஷ்**
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.*
grameshtu@gmail.com

**முனைவர் போ.சத்தியமூர்த்தி**
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.*
tamilkanikani@gmail.com

**முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்**
*கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.*
pjktamil@gmail.com

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*
krksankaraatamil@gmail.com

**முனைவர் உ.அலிபாவா**
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.*
alibavapkm@gmail.com

**முனைவர் சு.அரங்கநாதன்**
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்,,சென்னை.*
arangantnou@gmail.com

**முனைவர் ச.கவிதா**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
skavithatamil@gmail.com

**முனைவர் மனோன்மணிதேவி அண்ணாமலை**
*சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.*

**முனைவர் பரமசிவம் முத்துசாமி**
*மலேசியா பல்கலைக்கழகம், மலேசியா.*
mparam98@gmail.com

**R.F.Arooz**
*Raapa International Campus, Sri Lanka.*
raapa.arooz@gmail.com

**ADVISORY BOARD**

**M.Senthilkumar**
*Periyar University, Salem.*
senthiltamilnesan@gamil.com

**Dr.V.S.Sreenivasan**
*Nandha Arts and Science College, Erode.*
srivc2345@gmail.com

**Dr.T.K.Anuradha**
*Trinity College For Women, Namakkal.*
anukeerthigan@gmail.com

**Dr.R.Vijyarani**
*Beshap Heeper College, Tirucherappalli.*
vejheya.rani@gamil.com

**Dr.R.Nirmala Devi**
*Vellalar Womens College, Erode.*
prnirmaladevi@gmail.com

**Dr.K.Gayathiri**
*Government Arts College, Chidambaram.*
gayathiripraba1981@gmail.com

**Dr.S.Kumaran**
*University of Malaya,Malaysia,*
skumaran.um@gmail.com

**Dr.S.Senthilkumar**
*Annamalai University, Annamalai nagar,*
dr.senthilkumarcdm@gmail.com

**Sellathurai Sutharsan**
*University of Peradeniya, sri Lanka,*
sellathuraisutharsan@gmail.com

**Dr.N.Sathya**
*Government College For Women, Kumbakonam,*
drsathiyatamil@gmail.com

**Balasundaram Elayathamby**
*Annamalai Canada Campus, Canada,*
Balasudarame@yahoo.com

**Dr.S.Priya**
*Government Arts College, Chidambaram,*
rojacreatives@gmail.com

**R.F.அரூஸ்**
*ராபா பன்னாட்டு வளாகம், இலங்கை.*
raapa.arooz@gmail.com

**ஆலோசனைக் குழு**

**ம.செந்தில்குமரர்**
*பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.*
senthiltamilnesan@gamil.com

**முனைவர் வெ.ச.சீனிவாசன்**
*நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு.*
srivc2345@gmail.com

**முனைவர் தா.க.அனுராதா**
*டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்.*
anukeerthigan@gmail.com

**முனைவர் இரா.விஜயராணி**
*பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.*
vejheya.rani@gamil.com

**முனைவர் நிர்மலா தேவி**
*வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு.*
prnirmaladevi@gmail.com

**முனைவர் க.காயத்ரி**
*அரசு கலைக்கல்லூரி, சிதம்பரம்.*
gayathiripraba1981@gmail.com

**முனைவர் எஸ்.குமரன்**
*மலாய் பல்கலைக்கழகம், மலேசியா.*
skumaran.um@gmail.com

**முனைவர் ச.செந்தில் குமரர்**
*அண்ணாமலைப்பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்*
dr.senthilkumarcdm@gmail.com

**செல்லத்துரை சுதர்சன்**
*பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை.*
sellathuraisutharsan@gmail.com

**முனைவர் நா.சத்யா**
*அரசினர் மகளிர் கல்லூரி, கும்பகோணம்,*
drsathiyatamil@gmail.com

**பாலசுந்தரம் இளையதம்பி**
*அண்ணாமலை கனடா வளாகம், கனடா,*
Balasudarame@yahoo.com

**முனைவர் ச.பிரியா**
*அரசு கலைக்கல்லூரி, சிதம்பரம்,*
rojacreatives@gmail.com

# படைப்புகள் வரவேற்கப்படுகின்றன...!

**ஆய்த எழுத்து** - தமிழியல் ஆய்வுக்கான ஒரு புதியகளம். இவ்விதழ் 2013 ஆம் ஆண்டு முதல் காலாண்டு இதழாக வெளிவந்தது. 2018 இல் இருந்து மாத இதழாக வெளிவருகிறது. பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் கட்டுரை எழுதலாம். சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல் இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய பிற துறைகள் அனைத்தும் பொருளாகலாம்.

கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளுக்கு அக்கட்டுரை ஆசிரியரே பொறுப்பாவார். கட்டுரையாளர்களின் கருத்து இதழ் ஆசிரியர் குழுவின் கருத்தினை பிரதிபலிப்பன அல்ல. படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு. கட்டுரைகள் ஆய்வுத் தரமுடையவைகளாக அமைதல் வேண்டும். ஆய்வுப் பொருளுக்கு முரண்பட்டதாக அமையும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது. இவ்விதழுக்கு கட்டுரை அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

1. **பொருள்** : சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய அனைத்தும் இதன் பொருளாகலாம்.

2. **அளவு** : MSWord இல் A4 அளவில், 1.5 வாக்கிய இடைவெளியில் (Lining Space), பாமினி (Bamini Font) - 12 புள்ளி எழுத்தளவில், மூன்று முதல் ஐந்து பக்கங்களுக்குள் கட்டுரை அமைய வேண்டும்.

3. **முகவரி** : கட்டுரைத் தலைப்பின் கீழ் ஆசிரியர் பெயர், பதவி, முகவரியும், கட்டுரைமுடிவின் கீழ் இதழ் அனுப்ப வேண்டிய முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்களும் இடம்பெறவேண்டும்.

4. **கட்டுரை அனுப்பும் முறை** : கட்டுரையை ayidhaezhuthu@gmail.com (Or) pallavipublications@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

5. **சந்தா** : தனி இதழ் விலை ரூ.350/- இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் உறுப்பினர் கட்டணம் செலுத்தலாம். ஒரு ஆண்டிற்கு 12 இதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 ஆண்டுக்கட்டணம் (தனி நபர்) | - | ரூ. 3000/- |
| 1 ஆண்டுக்கட்டணம் (நூலகம், கல்வி நிறுவனங்கள்) | - | ரூ. 3600/- |

6. **கட்டணம் செலுத்தும் முறை** : உறுப்பினர் (சந்தா) கட்டணத்தை **PALLAVI PATHIPPAKAM** என்ற பெயரில் வரைவோலையாக (**DD**) ஈரோட்டில் மாற்றிக் கொள்ளத்தக்க வகையில் (**PAYABLE AT ERODE**) அனுப்பலாம். இணையவழி, (**NET BANKING**), அலைபேசி (**MOBILE BANKING**) வங்கி பரிவர்த்தனை உடையவர்கள் **NEFT** முறையிலும் பணம் செலுத்தலாம்.

**A/C Name: PALLAVI PATHIPPAKAM.**
**A/C Type : CA,**
**A/C No : 33679969977.**
**Bank : STATE BANK OF INDIA,**
**Sathy Road, Erode -638 011.**
**IFSC : SBIN0016100.**


**பல்லவி பதிப்பகம்**
118, மேட்டூர் சாலை, கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

**pallavipublications@gmail.com**
**ayidhaezhuthu@gmail.com**





**படைப்பாளர்களின் கவனத்திற்கு ....**

இதுவரை வெளியான, அனைத்து ஆய்த எழுத்து இதழ்களையும் எங்களது **www.pallavipathippakam.in** இணையத்தளத்தில், இதழ்கள் - ஆய்த எழுத்து பகுதியில் முழுமையாக பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம்.

**அல்லது**

**https://ayidhaezhuthu.in** என்ற இணையத்தளத்தில் பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம். அவ்வாறே தங்களது ஆய்வுக்கட்டுரைகளை இந்த இணையத்தளத்தின் வழியாக அனுப்பலாம்.

# பொருளடக்கம்


1. புறநானூற்றில் வாழ்வியல் சிந்தனைகள்

***முனைவர் ஆக்னஸ் மேரி** - 1

2. சுந்தரகாண்டத்தில் அனுமன் வெளிப்படுத்தும் மனித ஆளுமைப் பண்புகள்

***ப.அருணாதேவி** - 5

3. தொல்காப்பியர் உணர்த்தும் மெய்ப்பொருள்

***சு.ஜெயமதி** - 9

4. கலித்தொகையின் அக வாழ்வியல் கூறுகள்

***நா.சிந்து** - 13

5. நான்மணிக்கடிகையில் மனித வாழ்வியல் நெறிகள்

***முனைவர் ப.அலிஸ் ராணி** - 17

6. நாலடியார் உணர்த்தும் தனிமனித வாழ்வியல்

***ப.வருதராஜ்** - 21

7. வைரமுத்து கவிதைகளில் அறச் சிந்தனைகள்

***முனைவர் தா.லதா** - 25

8. ஆற்றுப்படை இலக்கியத்தில் விருந்தோம்பல்

***முனைவர் க.கிருஷ்ணவேணி** - 28

9. சங்க இலக்கிய அகப்பாடல்களில் அறச்சிந்தனைகள்

***முனைவர் ச.குருஞானாம்பிகா** - 33

10. ரமணிசந்திரன் நாவலில் அறச்சிந்தனை

***த.ஆதிலெட்சுமி** - 36

11. சங்க இலக்கிய எட்டுத் தொகையில் அறம்

***முனைவர் பு.எழிலரசி** - 40

# புறநானூற்றில் வாழ்வியல் சிந்தனைகள்

*முனைவர் ஆக்னஸ் மேரி, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தூய வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கடலூர்.

**முன்னுரை**

தமிழ் இலக்கியங்களில் அந்தந்தக் காலத்திற்கேற்ப தங்களின் வாழ்வியல் நிலைகளையும் வழிபாட்டு முறைகளையும் பதிவு செய்யத் தவறவில்லை. அந்த வகையில் சங்க காலத்தில் எழுதப்பட்ட சங்க இலக்கியங்கள் சங்கத்தமிழரின் வாழ்வியலின் ஒவ்வொரு கூற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது என்பது தெளிவு. இச்சங்க இலக்கியங்கள் தரணியிலே தமிழர்களின் பெருமையை நிலைநாட்டச் செய்த இலக்கியங்கள். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்தகுடி என்பதன் மூலம் தமிழ்ச் சமூகத்திற்கென்றே நீண்ட நெடிய வரலாறு இருக்கிறது என்பதனை அறிய முடிகின்றது. தமிழ்ச் சமூகம் பல்வேறு பண்பாட்டுக் கூறுகளால் கட்டமைக்கப்பட்ட சமூகம். இச்சமூகத்திற்கென்றே நீண்ட நெடிய வரலாறு இருக்கின்றது. இதனைச் சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது. இவ்வாறாக வாழ்ந்த வாழ்வியல் கூறுகளை புறப்பாடல்கலில் காணலாம்.

சங்கத் தமிழர்களின் வாழ்வில் காதல், வீரம், கொடை, அறம், விருந்தோம்பல், நம்பிக்கை, சமத்துவம், நடுகல்வழிபாடு போன்றவை அடிப்படைக் கூறுகளாக இருந்துள்ளன என்பதனை அறிய முடிகின்றது. நல்ல பழக்க வழக்கங்களையும், பண்பாட்டுக் கூறுகளையும் வாழ்வியல் நெறிகளாகப் பின்பற்றி வாழ்ந்து உள்ளனர். என்பது தமிழ் இலக்கியத்தின் வரலாறு சொல்லும் செய்தி. மொழிக்கு மட்டுமின்றி மக்களுடைய வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்துக் கொண்ட பெருமை பழந்தமிழரைச்சாரும். இந்நிகழ்வுகள் எல்லாம் சங்க இலக்கியமான புறநானூற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றின் சில கூறுகளைக் இக்கட்டுரையில் காண்போம்.

**கல்வி**

கல்விச் செல்வம் அழியாச் செல்வம், இத்தகு செல்வத்தை

**“உற்றுழி உதவியும் உறு பொருள் கொடுத்தும்**

**பிற்றை நிலை முனியாது, கற்றல் நன்றே”** (புறம் 183)

என்று கல்விச் சிறப்பினையும், கற்கும் முறையினையும் புறநானூற்று பாடலானது முறைப்படுத்திக் காட்டுகின்றது.

**திருமணம்**

புறநானூற்றுப் பாடலை பொருத்த வரை திருமணமானது ஒருவன் தான் மணக்க விரும்பிய பெண்ணை போர் நிகழ்த்தி மணம் செய்து கொள்வது வழக்கம்.

யானையை வெல்லும் வேந்தர்க்கே மகளை மணம் செய்து தருவார் என்பதனை “அணித்தழை நுடங்க ஓடி.... (புறம் 340) என்ற பாடலடியின் மூலம் அறியலாம் பிறிதொரு பாடலில் “வேந்துகுறை யுறவும் கொடா அன், ஏந்துகோட்டு,” (புறம் - 341) “மீன்நொடுத்து நெல் குவைஇ (புறம் 343) எனும் புறநானூற்றுப்பாடலில் வேந்தன் விழைந்த மகளை ‘கொடாஅன்‘ என தந்தை

தர மறுத்துள்ளதனையும் அறியமுடிகின்றது. இவ்வாறாக போரில் வெற்றிக்கொண்டே திருமணம் முடித்துள்ளனர் என்பதனை அறியலாம்.

**உணவு**

பண்டைத்தமிழர்கள் சுவைமிக்க உணவுப் பொருள்கலைச் சமைப்பதில் தேர்ந்திருந்தனர். அவரவர் வாழ்ந்த நிலத்திற்கேற்ப உணவு வேறுபட்டது. அவரவரின் பொருளாதார நிலையை ஒட்டியும் உணவின் தரம் வேறுபட்டிருந்தது. வராமீன் குழம்புக்கு மாவின் தீங்கனி புளியாகப் பயன்பட்டதை

**"ஓங்குநிலை மாவின் தீங்கனி நறும்புளி**

**மோட்டிரு வராஅற் கோட்டுமீன் கொழுங்குறை" (புறம் - 399)**

எனும் புறநானூற்று அடி எடுத்துரைக்கின்றது.

**விருந்தோம்பல்**

சங்க காலத்தில் பெரிதும் போற்றப்பட்ட பேரறம் விருந்தோம்பலாகும். தொல்காப்பியர் பெண்ணின் இலக்கணம் கூறுகையில் விருந்தோம்பற் பண்பாட்டையும் சேர்த்துக் கூறுகின்றார். திருவள்ளுவர் விருந்தோம்பலுக்கெனத் தனித்த தோர் அதிகாரம் வகுத்துள்ளார். விருந்தினரை முக மலர்ச்சியுடன் அன்புடன் வரவேற்று உபசரிப்பது தமிழரின் தலைசிறந்த பண்பாடுகளில் ஒன்றாகும். இப்பண்பாடு சங்கச் சமூகத்தில் நிரம்பி வழிந்ததைப் புறப்பாடல்களில் காணமுடிகிறது. வீட்டிற்கு வந்த விருந்தினரை உபசரிக்க வேண்டி தன்னிடம் வேறு பொருள் இல்லை என்பதனை அறிந்து தனது வீரமென போற்றப்பட்ட தனது வாளை அடமானம் வைத்து உணவு படைத்தனர். மறுநாளும் விருந்தினர் வந்தனர். சிறிதும் முகம் கோணாமல் தன் யாழை பணையமாக்கினர்.

**நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்**

**இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்றிக்**

**கருங்கோடுச் சீறியாழ் பணையமிது கொண்டு ஈவதிலாளன் (புறம் - 316)**

வீட்டுத் தலைவி எல்லாரிடத்தும் கடன் வாங்கியாகிவிட்ட நிலையில் மீண்டும் விருந்தினர் வந்தனர். விதைக்காக வைத்திருந்த தினையை உரலிற் பெய்து குற்றி உணவிட்டாள் என்பதனை புறம் 333-ல் காணலாம்.

**"வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி**

**மிச்சில் மிசைவான் புலம்!**

என்ற குறளுக்கு ஏற்ற விளக்கமாக இந்நிகழ்ச்சி அமைந்துள்ளதனை காணமுடிகின்றது.

**ஒற்றுமை**

புறநானூற்றில் மக்கள் ஒற்றுமையுடன் வாழ வேண்டி வலியுத்தியுள்ளதனையும் அறியமுடிகின்றது.

**ஒருவீர் தோற்பினும் தோற்பது நும்குடியே**

**இருவீர் வேறல் இயற்கையும் அன்றே (புறம் - 45)**

என வரும் பாடலில் நலங்கிள்ளியும், நெடுங்கிள்ளியும் சண்டையிட்டுக் கொள்ளும் பொழுது, கோவூர்க்கிழார் இவ்விருவரிடமும் ஒற்றுமையைக் காக்க வேண்டும் என வலியுறுத்துவதன் மூலம் ஒற்றுமையை நிலைநாட்ட முயன்றுள்ளதனை அறியமுடிகிறது.

**கொடை தன்மை**

தம்மிடம் இருக்கும் பொருளை பிறருக்கும் கொடுத்தலாகிய கொடைத்தன்மை மக்களிடம் இருக்க வேண்டிய பண்பாகும்.

செல்வத்துப் பயனே ஈதல்

துய்ப்பேம் எனினே, தப்புந பலவே”                    (புறம் - 189)

செல்வத்தின் பயன் ஈதலாகும். அனைத்தையும் தாம் ஒருவரே அனுபவிக்க வேண்டும் என்று நினைத்தால் அ∴து அவர்களிடம் நில்லாது, அவர்களை விட்டுச் சென்றுவிடும் என ஈகைப் பண்பை புறநானூறு வலியுறுத்துகிறது.

**நட்பு**

இங்கே அதியமான் அவ்வையாரின் நட்பு குறிப்பிடத்தக்கதாகும். எவ்வாறு மனித வாழ்க்கைக்குப் பொருட் செல்வம் முக்கியமோ அதே போன்றுதான் நட்பும் ஒரு மனிதனின் வாழ்க்கைக்கு மிக முக்கியமானதொன்றாக கருதப்படுகிறது. புறநானூற்றில் நட்பை பற்றியும் பதிவு அமைந்துள்ளன.

ஒரு நாள் செல்லலாம் இருநாள் செல்லலாம்.

......... வாழ்க அவன் தாளே                    (புறம். 101)

என்ற வரிகள் அதியமானிடம் அவ்வையார் கொண்ட நட்பின் திறத்தை அறியமுடிகின்றது.

**போர்க்கள அறம்**

சங்க கால மக்கள் அறம் தவறாமல் இருக்க வேண்டும். அறத்தை காத்தல் வேண்டும் என்பதனை வலியுறுத்தியுள்ளனர். வேந்தர்கள் போர்க்களம் செல்லும் போதும், போர்க்களத்திலும் தங்களது அறத்தினை காத்து நின்றனர்.

“ஆவும், ஆனியல் பார்ப்பன மாக்களும்

பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்”                    (புறம் 9)

என்பதன் மூலம் நீதியினின்றும், உண்மையினின்றும், தவறாது இருத்தல் வேண்டும் என புறப்பாட்டுக்கள் அரசர்களுக்கு அறிவுரை கூறுதல் மூலமாக அறக்கருத்துக்களை எடுத்துரைக்கின்றதனை அறியலாம்.

**மறத்தியரின் வீரம்**

சங்க கால வாழ்வியலில் வீரம் என்பது தலையாய கூறாக இருந்துள்ளது. இந்த வீரம் ஆண்களுக்கு மட்டுமில்லாமல் சங்கத் தமிழ்ப் பெண்களும் வீரமுள்ள தமிழ் மறத்திகளாக வாழ்ந்துள்ளனர், என்பதனை அறிய முடிகிறது. போர்க்களத்தைப் பார்த்துத் தமிழச்சிகள் பயப்படவில்லை வீரம் என்ற உணர்வை ஆண்களிடத்தில் காண்பதைப் போலவே சங்க காலப் பெண்களிடத்தும் காணமுடிகிறது. முந்தைய நாள் நடந்த போரில் அவளின் தந்தை போர்க்களத்தில் யானையைக் கொன்று தானும் மாண்டு போனான். மறுநாள் அவளது கணவன் நிரைகளைக் கவர்ந்து செல்லாதவாறு பகைவரை குறுக்கிட்டு நின்று போராடித் தானும் மண்டு போனான். இன்றும் செருப்பறை கேட்டு அந்த வீரத் தமிழ்ப் பெண் ஓடி ஒளிந்துவிடவில்லை. வீட்டிற்குள்ளேயே முடங்கிக்கிடந்துவிடவில்லை. மாறாகத் தனக்குச் சொந்தம் என்று இருக்கும் ஒரே ஒரு வாரிசான தன் மகனுக்குத் தலையில் எண்ணெய் தடவிச் சீவி அவனைப் போர்க்களம் நோக்கிச் செல்வாயாக என்று சொல்லி வழி அனுப்பிவைக்கிறாள். சங்கத் தமிழர்களின் வீரம் எத்தகைய சிறப்பு வாய்ந்தது என்பதனை நாம் பின்வரும் சான்று மூலம் அறிந்து கொள்ள முடியும்.

கெடுக சிந்தை கடிது இவள் துணிவே

மூதின் மகளி ராதல் தகுமே

மேல் நாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை

.......

ஒரு மகனல்ல தில்லோள்

செருமுக நோக்கிச் செல்கென விடுமே (புறம் - 279)

என்னும் புறநானூற்றுப்பாடலில் ஒரு பெண்ணின் வீரத்தை பதிவு செய்துள்ளதனை அறிய முடிகின்றது.

**நடுகல் வழிபாடு**

இறந்தவர்களைத் தெய்வமாக நினைத்து வணங்கும் வழக்கம் சங்க காலத்தில் இருந்துள்ளது, இதனை 'காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல் சீர்த்தகு மரபின பெரும்படை வாழ்த்தல்' எனும் தொல்காப்பிய நூற்பா கூறுகிறது. போரில் மாண்டவர்களைக் கல் நட்டு வணங்கும் வழக்கம் சங்கச் சமூகத்தில் இருந்துள்ளது என்பதனை இது காட்டுகிறது. போரில் இறந்த வீரர்களுக்குக் கல்நட்டு அவர்களைக் கடவுளாக வழிபட்டுள்ளனர். சங்க காலத்தில் மாடுகளே செல்வமாக கருதப்பட்டது. பகைவர்களிடமிருந்து மாடுகளை காக்கும் முயற்சியில் ஈடுபட்டு உயிர் நீத்த கரந்தை மறவர்களுக்கே பெரும்பான்மையான நடுகற்கள் நடப்பட்டன என்று அறிய முடிகிறது.

நடுகற்கட்கு மாலைகளும் மயிற்பீலிகளும் சூட்டப்பட்டமையைப் பல சான்றுகளால் அறியலாம். நடுகல்லை நட்டு அந்த இடத்தில் துணிப் பந்தலை இட்டனர் என்பதனை புறம் 260 இன் மூலம் அறிய இயலும்.

மேற்கூறப்பட்ட சான்றுகளின் மூலம் நடுகல் வழிபாடு சங்க காலத்தில் வழக்கில் இருந்துள்ளது என்பதனை அறியலாம்.

**முடிவுரை**

புறநானூறு உலக மக்கள் அனைவருக்குமுரிய உலகியல் உண்மைகளையும், மக்கள் வாழ்வில் அன்றாடம் எதிர்நோக்க வேண்டிய வாழ்வியல் உண்மைகளையும் வரிசைப்படுத்துகிறது. பண்டைக்காலத் தமிழ் மக்கள் தலைசிறந்த வாழ்வை வாழ்ந்துள்ளனர். எனபதனை அறியமுடிகிறது. இதனைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளது. பண்டைக்கால மக்களின் சிந்தனை, செயல், வாழ்வு இவை அனைத்தும் தமிழ்ப் பண்பாட்டிற்குள் கட்டமைக்கப்பட்டிருந்தன என்பதனை அறியமுடிகின்றது. கல்வி, அறம், கொடை, நட்பு? விருந்தோம்பல், எனச் சில வாழ்வியல் கூறுகளை புறநானூற்று வழி இக்கட்டுரை எடுத்துக் காட்டியது. இவை அனைத்தும் தமிழர்களின் வாழ்வியல் விழுமியங்களாக இன்றளவும் வளர்ச்சியடைந்து வருகின்றன.

**பார்வை நூல்கள்**


- தட்சிணாமூர்த்தி, அ., 2011. தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு, சென்னை.
- துரைசாமிப் பிள்ளை, அ., 2007 (ம.ப), புறநானூறு, கழக வெளியீடு, சென்னை.
- ஜெயமணி.

# சுந்தரகாண்டத்தில் அனுமன் வெளிப்படுத்தும் மனிதஆளுமைப் பண்புகள்

***ப.அருணாதேவி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ.எஸ்.ஆர்.என்.எம்.கல்லூரி (தன்னாட்சி), சாத்தூர்.

இராமாயணக் காப்பியத்தை அருந்தமிழில் ஆக்கித் தந்த பெருமை கம்பரையே சாரும். கம்பனின் காப்பியம் பலநூறு கோபுரங்கள் கொண்ட கலைக்கோயில். கம்பனின் பாத்திரங்கள் காலத்தின் சாத்திரங்கள் என வியக்கும் என்று கண்ணதாசன் கூறியுள்ளார். கம்பனின் காவியத்தில் இராமனுக்கு இணையான ஒரு பாத்திரமாக அனுமன் படைக்கப்பட்டிருக்கிறார். இதில் பண்பாட்டு பதிவுகளும், ஆளுமைகளும் காணப்படுகின்றன. அந்த வகையில் அனுமனின் மனிதநலப் பண்புகள் குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**ஆளுமைக் கூறுகள்**

ஆளுமையானது ஒருவரிடம் காணப்படும் உடற்கவர்ச்சியும், முக அழகும் என்று அறியா மக்கள் கருதுகின்றனர். இ∴து ஒரு தவறான கருத்தாகும். உளவியலறிஞர்கள் ஆளுமையை உடற்பண்புகள், மனப்பண்புகள், சமூக அறநெறிப்பண்புகள், மனப்பான்மைகள் போன்ற எல்லா பண்புகளும் இணைந்த முழுமையான கலவையாகும் என்று குறிப்பிடுகின்றனர்.

உளவியலாளர்களின் கூற்றுப்படி ஆளுமையை இரண்டு கூறுகளாகப் பிரிக்கலாம். "ஒன்று உருவ ஆளுமை, மற்றொன்று உள்ள ஆளுமை என்பதாகும். உருவ ஆளுமையானது மூன்று காரணிகளைக் குறிப்பிடுகின்றன. அவையாவன, உடை, உடல்நலன், தோற்றப்பொலிவு என்பதாகும். உள்ள ஆளுமையானது மனப்பான்மை மற்றும் தலைமைப்பண்புகளால் தீர்மானிக்கப்படுவதாகும்." இவற்றுள் உடல் ஆளுமையை விட உள்ள ஆளுமையே சிறப்பானதும், ஆழமானதும் ஆகும் இக்கட்டுரையில் அனுமனின் உள்ள ஆளுமையை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

**அனுமனின் ஆற்றல்**

ஒருவர் செய்யும் நற்செயலால் அவர்களுடைய வாழ்வு பொன்னாக மாறும். ஆனால் அத்தகைய நற்செயல்களை செய்யும்போது சில தடைகள் ஏற்படும். அத்தகைய தடைகளை எதிர்கொள்வதே சிறந்ததாகும் என்ற வாழ்வியல் தத்துவத்தை உணர்த்தி சென்றிருக்கிறார் அனுமன். ஏனென்றால் அனுமன் சீதையை தேடிச் சென்றபோது ஏற்பட்ட தடைகளும், அதனைக் கடந்து சீதையை சந்தித்ததன் மூலம் ஆற்றல் விளங்குகிறது..

**பிறர் நலம் பேணிப் பிறர் பொருட்டு வாழ்பவன்**

அனுமன் வீரத்தோடு உதவி செய்யும் இரக்க குணமும் உடையவனாகத் திகழ்ந்தான். எதிரிக்கு ஒரு துன்பம் நேரின் உதவி செய்யும் உள்ளப்பாங்கு, படை மறவர்கட்கு இருக்க வேண்டும் என்பதை திருவள்ளுவர்,

**"பேராண்மை என்ப தறுகண்; ஒன்றுற்றக்கால்**
**ஊராண்மை மற்று அதன் எ∴கு"** (குறள்.773)

என்று தம் திருக்குறளில் கூறியுள்ளார். இத்தகைய ஊராண்மைப் பண்பு அனுமனிடமும் காணப்படுகிறது. அனுமன் கடல் மேல் தாவியபோது குறுக்கிட்ட மைந்நாகமலையை அடக்கினான். பின் அது மக்கள் உருவில் வந்து, விருந்து உண்டு செல்லுமாறு அனுமனை வேண்டியது. அதற்கு அனுமன், 'யான் வந்த காரியத்தை முடிக்காமல் உணவு அருந்தமாட்டேன். உன் அன்புக்கு மகிழ்கிறேன். யான் இலங்கை சென்று வென்று மீண்டால் உனது விருந்தை உண்பேன் என அன்புரை வழங்கினான். (கடல்தாவு படலம். பாடல் 57)

சம்புமாலி என்னும் படைத் தலைவன் பல்வகைப் படைகளுடன் வந்து அனுமனோடு சண்டையிட்டு எல்லாப் படைகளையும் இழந்து தனிந்து நின்றான். அவன் நிலையைக் கண்ட அனுமன். அவனை நோக்கி, **"எளியவரின் உயிரைக் கொல்லுதல் நீதியன்று. உடன் வந்தவரைக் காக்கும் வலிமை உனக்கு இல்லை. எல்லாரையும் இழந்து தனித்து நிற்கின்றாய். இப்போது சாவதைத் தவிர உன்னால் வேறொன்றும் செய்ய இயலாது. எனவே நீ போய் வா"** (சம்புமாலிவதைப்படலம். பாடல் 43) என்று கூறி அனுப்பினான். இவ்வாறு தாய்மைக் குணம் உடையவனாக விளங்கினார் அனுமன்.

**நேர்மைக் குணம்**

இராவணன் உறங்கிக் கொண்டிருந்த பொழுதுதான், அனுமன் முதன் முதலில் அவனைக் காண்கிறான். அப்போது அவனது உயிரை எடுத்திருக்கலாம். ஆனால் உறங்குபவனது உயிரைக் கொல்லல் குற்றம் என்று விட்டுவிட்டானாம்.

**'உறங்குகின்றபோது உயிருண்டல் குற்றம் என்று ஒழிந்தேன்'**

**(பிணிவீட்டுப் படலம். பாடல்51)**

இவ்வாறு அனுமனின் நேர்மைக் குணத்தை காணலாம்.

**சத்தியவான் அனுமன் :**

சீதையைக் கண்டுபிடித்தே வருவேன் என்று கூறிய சத்தியமொழி தவறாமல் சீதையைக் கண்டுபிடித்தலில் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு வந்தவர் அனுமன். மைந்நாக மலைக்குச் சொல்லிச் சென்ற சொல் தவறாமல், செயல்பட்டார். திரும்பி வரும்போது உன்னிடம் வருவேன் என்று கூறியது போல் இலங்கையிலிருந்து திரும்பிய போது மைந்நாக மலையையும் பார்த்து விபரம் கூறிச் சென்றான் அனுமன் என்பதை (திருவடி தொழுதபடலம். பாடல் 2)கம்பன் பாடலில் குறிப்பிடுகிறார். இவ்வாறு சத்தியவானுக்கு உதாரணமாக திகழ்கிறவர் அனுமன்.

**கூரிய மதிநுட்பம்**

அனுமன் முதல் முதலாக வீடணனைக் கண்டதும், அவனது நல் உணர்வைத் தனது உணர்வினால் உணர்ந்து கொண்டான்; இவன் குற்றம் இல்லாதவன் - நல்ல பண்பினன் என்பதையும் குறிப்பால் தெரிந்து கொண்டான்.

**"உற்று நின்று உணர்வைத் தன்உணர்வினால் உணர்ந்தான்**

**குற்றம் இல்லதோர் குணத்தினன் இவன் எனக் கொண்டான்"**

**(ஊர் தேடு படலம். பாடல்135)**

அனுமன் இந்திரசித்தைக் கண்டதும் இவன் அரக்கனா? சிவன் மகனாகிய முருகனா? இராம இலக்குமணர்கள் இவனோடு பல நாள் போரிட நேரும் போல் நினைக்கச் செய்கிறது என்று அவனது தோற்றத்தை வைத்து கணிக்கிறார்.

இவ்வாறு ஒவ்வொரு செயலிலும் நிகழ இருப்பதைத் தன் மதி நுட்பத்தால் முன்பே அறிந்து உணர்ந்து அனுமன் கூறுகிறான். இராவணனது தோற்றத்தைக் கண்ட அனுமன். இவனை இராமனைத் தவிர பிறரால் வெல்ல முடியுமோ? இவனால் என்னை வெல்ல முடியாது; என்னால் இவனையும் வெல்ல முடியாது. எனவே தாக்குவோமாயின் வீண் காலங்கள் கழிந்து போகுமே தவிரப் பயன் இராது: எனவே இவனோடு நாம் போர் தொடங்குவது சரியா? என்றெல்லாம் அனுமன் என்னுகிறான்.

“ என்னையும் வெலற்கு அரிது இவனுக்கு: ஈண்டு இவன்

தன்னையும் வெலற்கு அரிது எனக்கு: தாக்கினால்

அன்னவே காலங்கள் கழியும், ஆதலான்

துன்னருஞ் செருத்தொழிப் தொடங்கல் தூயதோ? (பிணிவீடுப் படலம் - 54)

ஒவ்வொரு செயலையும் ஆராய்ந்து செய்யக்கூடிய ஆற்றல் உடையவராக இருந்தார்.

**அறிவுடைமை – நீதியுணர்வு**

அனுமன் இராவணனைக் கண்டதும் அவனைக் கொல்ல வேண்டும் எனக் கொதித்து எழுந்தான். பின்னர் அறிவைப் பயன்படுத்தி அமைதி பெற்றான். இராவணனைக் கொல்லும்படி இராமர் பணிக்கவில்லை. ஒன்றை விட்டு ஒன்று செய்தால் உணர்வுடைமைக்கு அழகு ஆகாது. என்று எண்ணிப் பார்க்கிறார்.

நன்னெறியுடைய சிவன் போன்ற ஆற்றல் உடையர் என்பதால் எதையும் ஆராயமல் அவசரமாக செய்யமாட்டார்கள் என்றெல்லாம் எண்ணி அமைதி பெற்றான். இவ்வாறு அனுமன் சிந்தித்து செயலாற்றும் மனப்பான்மையையும் நீதியுணர்வையும் கீழ்கண்ட பாடல் வழி அறியமுடிகிறது.

ஆலம்பார்த் துண்டவன் போல் ஆற்றல் அமைந்துள் எனினும்

சீலம் பார்க்க உரியோர்கள் எண்ணாது செய்பவோ?

காலம் பார்த்து இறைவேலை கடவாத கடல் ஒத்தான். (ஊர்தேடு படலம் 220)

**தற்பெருமை அற்றவன்**

இலங்கைக்குள் சீதையைத் தேடித் தனி ஆளாக நுழைத்தான் அனுமன். சீதையைக் கண்டு அடையாளமாக இராமனிடம் பெற்றுக் கொண்டு சென்ற கணையாழியைக் கொடுத்து உரையாடி தைரியம் சொல்லி சூடாமணியை இராமனுக்கு அடையாளமாகப் பெற்று கிளம்பினான் அனுமன். திரும்பும் போது இப்படியே வெளியேறினால் நமக்கு அழகில்லையே……. என்று எண்ணியவன் அசோகவனத்தை அழித்தான். அனுமனின் வருகைக்காக மயேந்திரத்தில் அங்கதன் முதலியோர் நடந்தவற்றை அறிய ஆர்வத்துடன் காத்திருந்தனர். அனுமன் சிலவற்றை மறைத்து கூறினார். அவற்றுக்கான காரணத்தையும் கம்பன் எழுதுகிறார்.

“ஆண்தகை தேவி உள்ளத்து அகுந்தவம் அமையச்சொல்லி

பூண்டபேர் அடையாளம் கைக்கொண்டதும் புகன்று போரில்

நீண்ட வாள் அரக்கரோடு நிகழ்ந்ததும் நெருப்பு சிந்தி

மீண்டதும் விளம்பான் தான் தன் வென்றியை உரைப்ப வெள்கி”

இவ்வாறு தனது சிறப்புகளைத் தானே பேசுவதா என்று எண்ணினாராம். அனுமனின் நாணம்தான் அதற்குக் காரணம் என்கிறார் கம்பன். ஒவ்வொரு காட்சி அமைப்பிலும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய கருத்துகளை வைத்துக் கொண்டேதான் போகிறார் கம்பன்.

‘அமைந்து ஆங்கு ஒழுகான், அளவறியான்

வியந்தான் விரைந்து கெடும்.’

தன்னையே எப்போதும் பெரிதாக நினைத்துக் கொண்டும் பேசிக் கொண்டும் திரிபவன் வளர்ச்சியில்லாமல் போவது மட்டுமல்லாமல் அழிந்தும் போவான் என்கிறான் வள்ளுவன். இதன் மறுபக்கமாக பெரும் செயலைச் செய்துவிட்டு அதைப் பற்றி பேசாமல் அடக்கத்துடன் இருப்பவருக்குப் பெருமைகள் சேரும் என்பததைக் காட்டுகிறான் கம்பன் தற்பெருமை வேண்டாம் என்று ஒதுக்கிய அனுமனுக்கு உரிய அங்கீகாரமும் பெருமையும் எதிர்பாராத நேரத்தில் கிடைக்கும் என்பதை கம்பன் புலப்படுத்தியுள்ளார்.

**அனுமனின் ஆளுமை**

இராமா் வீடணனை அடைக்கலமாக ஏற்ற பிறகு இலங்கையிலிருந்து அனைவரைப் பற்றியும் கூறினாா். இராவணனை விட்டு விலகி இராமனுடன் சேர்ந்ததற்கான காரணத்தையும் இறுதியாகச் சொன்னான்.

'இராமா! கரன், வாலி முதலியோரை கொன்றதை அறிந்திருந்திருக்கிறேன். ஆனால் நான் இங்கு வந்தது அனுமன் செய்த வீரப்போர், அனுமனின் ஆற்றல் இராவணனுடன் அவன் பேசிய விதம் ஆகியவற்றை நேரில் கண்டேன். இலங்கையை எரித்து மீண்ட அவனது தீரத்தைப் பார்த்து வியப்படைந்து இங்கு வர முடிவு செய்தேன் என்றான் வீடணன். ஒரு தலைவனின் எதிரிலேயே, அவனுடைய தொண்டன் பாராட்டப்படுகிறான். உயர்ந்த நிலையில் இருப்பவர்கள், தம்மை விடச் சற்று குறைந்த நிலையில் இருப்பவர்களின் ஆற்றலையும் செயல்களையும் மகிழ்ந்து பாராட்ட வேண்டும் என்ற விழுமியக்கருத்தை சுட்டிக்காட்டி சென்றுள்ளது என்பதை இங்கு புலப்படுத்துகிறார்.

**பேச்சாளுமை**

அறிமுகமில்லாத நபரை புதிதாக சந்திக்கும் போது எப்படி அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதைக் கம்பன் அழகாகக் காட்டியுள்ளார்.

**யாா் என விளம்புகேன் நான், எம் குலத் தலைவற்கு, உம்மை**

**வீர நீா் பணித்திர்! என்றான், மெய்மையின் வேலி போல்வான்.**

உங்களை யாா் என்று சொல்லி என்னுடைய தலைவனிடம் நான் அறிமுகப்படுத்துவது. நான் அவரிடம் என்ன சொல்ல வேண்டும் என்பதனை, நீங்களே எனக்கு ஆணையிடுங்கள் என்று கேட்டாராம் அனுமன். இவ்வாறு ஒருவரிடம் பேசும் பண்பாட்டு முறையை உணர்த்துகிறார்.

**சுக்ரீவனிடம் அனுமன் கூறும் முறை**

நம்மைக் கொல்லத்தான் வாலி இருவரையும் அனுப்பியுள்ளான் என்று பயந்து ஓடியவன் சுக்ரீவன். அவன் அச்சம் அதிகமாகாமலும், அதிர்ச்சி அடையாதவாறும் பேச்சைத் தொடங்குகிறான். ' அளவற்ற வலிமையுடையவனான வாலியின் உயிரைக் குடிக்கும் எமன் வந்துள்ளான்'. இவ்வாறு அனுமனது சொற்கள் , சுக்ரீவனுக்கு அச்சத்தைப் போக்கி மகிழ்ச்சியை தந்தன.

**இராமனிடம் அனுமன் கூறும் முறை**

இலங்கையிலிருந்து வான் வழியாக சென்று, மிகுந்த வருத்தத்துடன் இருந்த ராமனின் மனதுக்கு வறண்ட நிலத்தில் பெய்த முதல் மழைபோல் 'கண்டேன் சீதையை' என்று சமயோசிதமாய் அனுமன் கூறினார். ராமன் இவரைச் 'சொல்லின் செல்வன்' என்றழைத்தார். சீதையிடம் பெற்ற சூடாமணியை ராமனிடம் கொடுத்து சீதாபிராட்டி நலமாக உள்ளார். வருத்தம் கொள்ள வேண்டாம் என்று ஆறுதல் அளிக்கின்றான்.

**தொகுப்புரை**

உண்மை பக்தன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை கம்பன் அனுமன் வழி புலப்படுத்துகிறார். அனுமனிடம் காணப்படும் இனிய உயர் பண்புகளான தற்புகழ்ச்சியின்மை, பணிவு, புகழில் மயங்காமை இவை மானிடர்க்கு உணர்த்தும் பண்புகளைப் பெற்றவன் அனுமன் இராம தூதனாக உயர்ந்து பலரால் பாராட்டப்படும் நிலையிலும் தன் பெருங்குணங்களை விட்டுவிலகாத தகைசால் பெருந்தகையாகவே காட்சி தருகின்றார் என்பதை கம்பன் வழி அனுமனின் உயரியப் பண்புடன் கூடிய ஆளுமையை அறிய முடிகிறது.

# தொல்காப்பியர் உணர்த்தும் மெய்ப்பொருள்

***சு.ஜெயமதி,** முனைவர் பட்ட ஆய்வாளர், உதவிப்பேராசிரியர், டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்.

சங்க இலக்கியங்களில் மிகவும் தொன்மையான தொல்காப்பியத்தில் கடவுள் கொள்கையும், வினைப்பயன் கோட்பாடும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. பொருள் மொழிக் காஞ்சி, வாயுறை வாழ்த்து, செவியறிஉ முதலிய துறைகள் பழந்தமிழரின் மெய்ப்பொருள் உணர்விற்கும், ஒழுக்க நெறிக்கும் சான்று பகர்கின்றது. இவற்றை அடிப்படையாகக் கொண்டே மற்ற இலக்கியங்களும் திகழ்வதைக் காணலாம்.

**இறைமை:**

இறைவன் நல்லன தீயனவற்றைத்தான் விரும்பியோ வெறுத்தோ செய்பவன் அல்லன். நல்லனவற்றிற்கு நன்மையும், தீயனவற்றிற்கு தீமையும் செய்துவிட்டு தான் செயலற்று இதனை

**“வினையின் நீங்கினான்”.** (தொல்-பொருள் மரபு 94)

என்றும்,

**திருவள்ளுவர்: “பற்றற்றான்”** (குறள் 350)

என்றும் குறிப்பிட்டுள்ளார். இறைவன் எல்லாம் அறிந்தவன் என்பதை

**“விளங்கிய அறிவின் முனைவன்”** (தொல் - பொருள், மரபு-94)

என்று தொல்காப்பியரும்,

**“வாலறிவன்”** (குறள்-2)

என்று திருவள்ளுவரும் குறிப்பிட்டுள்ளனர்.

இத்தகைய இறைவனுக்குப் பிறப்பு இல்லை என்பதை

**“சிறையில் என்ப முதல்வன் கண்ணே”** (தொல் மரபு-108)

என தொல்காப்பியர் சுட்டுகிறார்.

**உருவ வழிபாடு:**

தெய்வங்களுக்கு உருவம் கொடுத்து வழிபடும் வழக்கம் கிரேக்கர்கள் வந்தபின்தான் வழக்காற்றில் வந்தது என வரலாற்று ஆசிரியர்கள் கூறுவது, ஆனால் கிரேக்கத் தொடர்பு இல்லாத காலத்திலேயே தெய்வங்களுக்குக் கோயில்கள் எடுத்தும், உருவங்கள் அமைத்தும் தழிழர்கள் வழிபட்டதைச் சங்க இலக்கியங்களால் அறிகிறோம். முல்லை நில மக்கள் தம்மைச் சூழ்ந்த இயற்கை எழிலையும், காட்டிடை மலர்ந்த காயாம்பூவினையும் கடவுளுக்கு ஏற்றித் திருமாலாக வழிபட்டனர். இதனைத் தொல்காப்பியர்

**“மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின் தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்”**

(தொல்-பொருள்-10)

என்பர். பூவை என்பது காயாம் பூவைக் குறித்தது.

தொல்காப்பியத்தில் கடவுளை கருப்பொருளாக வைத்து ஐவகை நிலங்களிலும் வணங்கப் பெற்று தெய்வங்களை அவற்றின் நிலத்திற்கேற்ப மாயோன், சேயோன், என்றும் இடத்திற்கேற்ப வேந்தன் வருணன் என்றும் குறிப்பிடுவதை காணலாம்.

**“மாயோன் மேய காடுறை உலகமும்**

**சேயோன் மேய மைவரை உலகமும்**

**வேந்தன் மேய தீம்புன லுலகமும்**

**வருணன் மேய பெரு மணல் உலகமும்**

**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்**

**சொல்லிய முறைவாற் சொல்லவும் படுமே”**

இதனால் உருவ வழிபாடு தமிழரிடையே தொன்றுதொட்டு இருந்தமை புலனாகின்றது. மேலும் தெய்வத்திற்கு தனி உருவம் அமைத்து அவ்வுருவத்தின் முன்னின்று வழிபடுதல் தமிழர் மரபு.

**‘தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே’** (தொல் பொருள்-138)

தெய்வத்தின் முன்னின்று சூழுறை செய்யும் வழக்கமும் தமிழரிடம் உண்டு.

**“திருமணி விளக்கின் அலைவாய்ச்**

**செருமிகு சோளயொ டுற்ற சூளே”** (அகம் 266- 20-21)

என்று உரைக்கின்றார்.

**திருமணம்:**

ஒருவனும் ஒருத்தியும் ஒன்று சேர்ந்து நடத்தும் திருமண நிகழ்ச்சி தெய்வத்தால் தான் நிகழ்கிறது என்று தமிழர்கள் கருதினர்.

**“நாமக் காலத்து உண்டெனத் தோழி**

**ஏழுறு கடவுள் ஏத்திய மருங்கினும்”** (தொல் கற்பு – 5)

என்ற தொல்காப்பிய நூற்பா விளக்குகின்றது. கடவுளைக் கணவனாகவும் தன்னை மனைவியாகவும் எண்ணிப் போற்றுவது பழந்தமிழரின் மரபே.

**“காமப் பகுதி கடவுளும் வரையார்**

**ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்”**

என்று இவ்வரிகள் போற்றுகின்றது.

**உறுதிப் பொருள்:**

மக்கள் அடையும் உறுதிப் பொருள் மூன்றே.

**“இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு”** (தொல் பொருள் - 89)

வேட்கை முறையில் இன்பம், பொருள், அறம் என்றும், செயற்கை முறையில் அறம், பொருள், இன்பம், என்றும் வாழ்க்கையின் இவை மூன்றுமே வாழ்க்கையின் பகுதிகள் என்பது சாலச் சிறந்தது.

**தெய்வத் திருவாக்கு:**

மக்கள் மேல் நின்று தெய்வம் அவர் வாழ்வழி உரைப்பதாகத் தமிழா் எண்ணினா். தொடா்பின்றி அறியாமல் பிறா் வெறியாட்டம் 109 வாயிலிருந்து வெளிவரும் விருச்சிச் சொல்லையும் அவ்வாறு நம்பினா். புள் நிமித்தம், கழற்ச்சிக்காய் விழுதலின் பயன்

**'கட்டினும் கழங்கினும்'** (தொல் பொருள் 113)

பல்லி ஒலி முதலான பல்வேறு வகைகளில் தெய்வத் திருவாக்குக் கிடைப்பதாகக் கருதினா்.

**ஒழுக்க நெறி:**

அறநெறியில் வழுவாமை **'கட்டமை ஒழுக்கம்'** எனப்பட்டது. அந்தணா் சான்றோா், மற்றையோா் முதலான எல்லாரிடத்திலும் ஒழுக்க நெறி தவறாது நடந்து கொள்ளவேண்டும் பெரியோா்களின் ஒழுக்கம் மிகவும் பெரிதாகப் போற்றப்பட்டது.

**"அந்தணா் திறத்தும் சான்றோா் தோத்தும்**

**அந்தமில் சிறப்பிற் பிறா்பிறா் திறத்தினும்**

**ஒழுக்கம் காட்டிய குறிப்பு"** (தொல் பொருள் 144)

ஒழுக்கம் உயிரைக்காட்டிலும் சிறந்தது.

**'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்'**

என்ற வள்ளுவரின் கருத்தும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**உயிரினும் சிறந்தன்று நாணே, நாணினும்**

**செயிா்தீா காட்சிச் கற்புச்சிறந் தன்று எனத்**

**தொல்லோா் கிளவி புல்லிய நெஞ்சமொடு** (தொல்பொருள் 111:13)

என்று ஒழுக்கநெறி தவறாமையை குறிப்பிட்டுள்ளனா். ஒழுக்கத்திலிருந்து தவறுதல் கொடுமை எனவும், இவ்ஒழுக்கக் கேடே அவனைத் தாக்கும் என்பதும் பண்டைய தமிழரின் நம்பிக்கை என்பதை

**"கொடியோா் கொடுமை சுடும்"**

என்ற வரிகளால் சுட்டுகின்றாா்.

**துறந்தாா் பண்பு:**

ஐம்புல நுகா்ச்சியில் தமக்குள்ள பற்றினைத் துறப்பது துறவு.

**'காமம் நீத்த பால்' என்பாா் தொல்காப்பியா்.** (தொல் பொருள் 145-25)

இத்துறவினா் உலகிலுள்ள உயிா்களிடத்திலுள்ள அருளுடைமையை துறந்தவா்கள் அல்லா்.

**'அரும்பகை தாங்கும் ஆற்றல்' கொண்டவா்.** (தொல் பொருள்-75)

குணக்குன்றாய் விளங்கும் இவா்கள் சினம் கொள்ளின், அதனை யாராலும் மாற்றவோ தாங்கிக் கொள்ளவோ முடியாது.

**“குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுறி**

**கணமேயும் காத்தல் அரிது”** (குறள் -29)

என்றுரைக்கின்றார் வள்ளுவர். இவர்கள் எண்வகை இயல்புகளை உடையவர்கள் என்பதை

**“நாலிரு வழக்கில் தாபதப் பக்கமும்”** (தொல் பொருள் 74)

என்ற வரிகள் விளக்குகின்றது.

(எண்வகை இயல்புள் 1.நீராடல், 2.நிலத்திடைக் கிடத்தல், 3.தோலுடுத்தல், 4.சடைபுனைதல், 5.எரியோம்பல், 8.கடவுள் வழிபாடும் விருந்தோம்பலும் என்பவை இளம் -உரை)

தமிழரின் இந்தத்துறவு கோட்பாடு இளமைத் துறவை அடிப்படையாகக் கொண்டது அன்று. (வடமொழியாளரின் பிரம்மசரியத் தத்துவம் இளமைத் துறவின பாற்படும்) இல்லற வாழ்வில் எல்லா இன்பங்களையும் துய்த்து, பின்பு மற்றவற்றை தம் மக்களுக்கு விட்டுவிட்டு முதுமையில் துற்கசும் துறவே தமிழரின் துறவுத் தத்துவமாகும்.

**“காமம் சான்ற கடைக்கோட் காலை**

**ஓமம் சான்ற மக்களோடு துவன்றி**

**ஆறம்புரி சுற்றமொரு கிழவனும் கிழத்தியும்**

**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே”**

இத்தகைய துறவு, உலகைத் துறப்பது அன்று மனத்தால் தன்னலத்தை துறப்பதாகும்.

தொல்காப்பியர் வாழ்வியலுக்குத் தேவையான மெய்ப்பொருளை ஆராய்ந்து மெய்மையினை நிலைநாட்டும் அறிவுக்கலையே தத்துவம் என்ற குறியீட்டால் அறியமுடிகின்றது. மெய்யறிவு பற்றிய உயர்சிந்தனைகளை உலகில் முதலில் மொழிந்தவர் நம் தமிழரே என்பதும் புலப்படுகின்றது.

# கலித்தொகையின் அக வாழ்வியல் கூறுகள்

***நா.சிந்து,** உதவிப்பேராசியர், தமிழ்த்துறை, அன்னை மகளிர் கல்லூரி, புன்னம் சத்திரம் - கரூர்.

**முன்னுரை:**

கலித்தொகையின் அக வாழ்வியல் கூறுகள் என்னும் இக்கட்டுரையில் பாலைக்கலி, குறிஞ்சிக்கலி, மருதக்கலி, முல்லைக்கலி, நெய்தல்கலி, ஆகிய பாடல்களின் வழி வெளிப்படும் கலித்தொகை கால மக்கள் வாழ்வியல் குறித்தக் கருத்துக்களைக் காண்போம்.

**தலைவன் தலைவிக்கிடையிலான அன்பு நிலை**

அன்பு ஒன்றே வாழ்வின் தாரகமந்திரம் என்பது கலித்தொகையில் காணலாகும் மையக்கருத்தாகும். வாழ்க்கையில் பொருளை விட அன்பே சிறந்தது என்று தலைவி எடுத்துரைக்கிறாள். இருப்பினும் பொருளைத் தேடி தலைவன் செல்கின்றான். ஆனால் அவன் செல்லும் வழியில் காணும் காட்சிகளே அவனது செலவை தடுத்துவிடும் என்று தலைவி கூறுவதாக அமைந்துள்ள பாடல்

**"அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்ததததை**

**மென்சிறகால் ஆற்றும் புறவும் எனவும் உரைத்தன்றே"**

தலைவனை பிரிந்து தலைவி சிறிது நேரம் கூட உயிர் வாழமாட்டாள் என்ற அன்பின் தன்மையை வலியுறுத்துவதாக கலித்தொகை பாடல்கள் அமைந்துள்ளன.

**" நிலையிய கற்பினாள் நீ நீப்பின் வாழாதாள்"**

**ஒரு நாள் நீர"**

"பொழுது இடைப்பட நீப்பின் வாழ்வாளோ"?என்ற வரிகளில் இருந்து அறியலாம்.

**ஈதலின் சிறப்பு**

ஈகையில் சிறந்த பெரியோர், ஏனையோர் தம்பால் வந்து வறுமை கூறி இரப்பதற்கு முன்பாக விரைந்து அவர்க்கு உதவுவர்.

**"தொலைவு ஆகி இரந்தோர்க்கு ஓன்று ஈயாமை இழிவு"**

எனவரும் கலித்தொகை அடிகளால் உணரலாம். பிறர்க்கு ஈவதில் விருப்பமுடையவர்க்குச் செல்வம் பெருகுதல் இயல்பாகும்.

**"பிறர்க்கொன்று ஈயாது வீயும் உயிர்தவப்பவே"(புறம்:235)**

என்றபடி ஈவோர் மிக அரியவராவார்.ஈயாது செல்வத்தைக் காத்துவைப்போர் பொருள் யார்க்கும் பயன்படாது அழிந்து போகும்.

**வழிபாட்டு முறைகள்**

உறங்காத என் கண்கள் துன்பக்கண்ணீர் சிந்த, கைவளை கழன்றோட, அழகு அழியத் துன்புறுகின்றேன்.நான் வருந்துவேன் என்று எண்ணித் தயங்காமல் சென்றார்.அவருக்காக ஒன்று செய்யக்கூடும் என்று தோன்றுகிறது, என்று தலைவி கூறுவதுடன் யான் அழகு இழந்து வருந்த அதைக்கருதாமல் பிரிந்ததார். அவர் செல்லும் வழியில் கற்களில் பட்ட சூடு தணியும்படி மழை பொழிக என்று மேகத்தை வேண்டி வழிபடலாம்

யான் துயருறும்படி அன்பின்றிப் பிரிந்து பொருள் ஈட்டுவதற்காகக் காதலர் சென்ற வழியில் காய்ந்த தூறுகளில் படிந்து வீசும் காற்றை வெப்பம் இன்றி வீசுமாறு வேண்டி வழிபடலாம்.ஆனால் அது கற்புக்கு பொருந்துமா? என்று எண்ணி அவர் சென்றார். ஆனால் அறக்கடவுள் நாட்டில் பஞ்சம் உண்டானால் மழையைப் பெய்ய செய்யும் நிறையாற்றல் கொண்ட கற்பினை உடையளின் உடம்பில் பசலை பாயும் என்று அஞ்சி அவரது முயற்சியை தடுத்துவிட்டது.என தோழி கூறும் போது தலைவன் செல்லும் வழியில் ஏற்படும் இடர்களைப் போக்க, தெய்வங்களை வழிபட்டனர் என்றுக் கூறுவது, அக்காலத்திய வழிபாட்டு முறைகளை குறிப்பிடுகின்றது.இதனை பின்வரும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

**“தொல்நலம் தொலைபுஈங்குயாம் துயர்உழப்பத் துறந்து உள்ளார்**

**துன்னிறம் காதலர் துறந்து ஏகும் ஆரிடைக்**

**கல்மிசை உருப்பஇறக் கனைதுளி சிதறுஎன”**

**வள்ளைப்பாட்டுப் பாடுதல்**

முகத்திற்குப் பொருத்தமான கண்ணையும் மகிழ்ச்சி தரும் வகையில் பேசும் இயல்பையும் உடைய மகளிர், நாணித் தலை சாய்ப்பது போலச் சிறிதே சாய்ந்து கிடக்கும் தினைக்கதிர்களை உருவி சந்தன மர உரலில் இட்டு, முத்து விளைவதாகிய யானைத் தந்தத்தால் வேலைப்பாட்டுடன் செய்த உலக்கையை மாறி, மாறி ஓங்கி குற்றிக் கொண்டே தலைவியும், தோழியும் வள்ளைப்பாட்டைப் பாடினார்.

ஆழகிய நெற்றி, சீவி முடித்த கூந்தல், மூங்கிலை ஒத்த பெரிய மெல்லியத்தோள், மலர் மணம் கமழும் கன்னங்கள்-இவற்றை உடையவளே! துளைகளை உடையதால், மூங்கில்களில் காற்றுப் புகுந்து ஒலியெழுப்பும், அந்த மலையைப் புகழ்ந்து, நீ பாடு, பிறகு யானும் அவ்வாறே புகழ்ந்து பாடுவேன். என தோழி தலைவியை நோக்கிக் கூறுகின்றான்.

**“என்னைச் சேர்ந்தவரை நான் பிரியேன்”**என்று இருப்பவனது மலையில் அடங்காத வலிமையும், அழகும் உடைய ஆண் யானை தன் விருப்பத்திற்குறிய பெண்யானைக்கு, அதன் கடுமையான கருப்பத்தால் தோன்றிய மசக்கையைக் கண்டு விருப்பத்துடன் கரும்புகளை முறித்துவந்து கொடுக்கும், என்ற நாம் தனது மலையைப் பாட, மலை நாடனாகிய பெருந்தகைத் தலைவன் அதை விரும்பிக் கேட்டு, உடல் பூரித்த உவைகையோடு, ஆராத இன்பம் துய்த்தற்குரிய மென்மையான உனது உடம்பு அழகு பெறும் வண்ணம் திருமணம் செய்து கொள்வதற்காக வந்தனன். என தோழியும், தலைவியும் வள்ளைப்பாட்டைப் பாடுவர்.இதனை, பின்வரும் பாடலடிகள் எடுத்துக்காட்டுகின்றன.

**“அகவினம் பாடுவாம் தோழி அமர்க்கண்**

**நுகைமொழி நல்லவர் நாணும் நிலைபோல்**

**புகைஇல்நோய் செய்தான் பயமலை ஏத்தி**

**அகவினம் பாடுவாம் நாம்!...........”**

**தைநீராடல்**

கன்னியர் தைத்திங்களில் கூட்டமாகக் கூடி நீராடுதலும். பிறர் மனையில் பாடி, ஐயமேற்றுப், பலர்க்கும் ஈதலும், பாவை நோன்பு நோற்றலும், ஒரே நோன்பின் உறுப்புக்களாகும். இக்காலத்தில் அது மார்கழித் திங்களில் ஒரு சிறிது மாற்றத்துடன் கொண்டாடப்படுகிறது.

பொய்கை நீரில் தாமரை இலைகள் மிதக்க அவற்றின் இடையே தலைதூக்கி நிற்கும். மொட்டவிழ்ந்த தாமரை மலரோடு கூடிய தண்டில் உள்ள வளையங்களை அடுக்கி வைத்தது போன்ற முத்து வளையங்களை அடுக்கி வைத்தது போன்ற முத்து வளையல்களை அணிந்து உன் மெல்லிய முன்கைகள் மலையெங்கும் மணங்கமழும் காந்தள் மலர் போலத் தோன்றுபவை. துடுப்புப் போல விளங்குபவை. அந்தக் கைகளால் சிவப்புநிறச் சாயத்தால் கோலமிட்ட மரப் பானையையும், பாவையையும், ஏந்தி விளையாடுவதற்காக அழகிய சிலம்புகள் ஒலிக்க, உன்னுடைய பின்னிய கருங்கூந்தலைக் கண்டு என்னிடமிருந்து நழுவுமாறு மெல்ல நடந்து செல்பவளே, கேள் எனத் தலைவன், தலைவியை நோக்கிக் கூறுகின்றான்.

பொருத்தம் பார்த்து அணிந்துகொண்ட வளையல்களை உடையவனே! **“இவனைக் கண்டு மூச்சடங்கி நின்று இவனுக்கு வந்த மனவருத்தம் என்ன”** என்று கேட்கும் கசிவு இவளுக்கு இல்லை” என்று அயலார் உன்னைப் பழித்தால் பொம்மைகளை வைத்துப் பாவைத் திருமணம் என்று மணற்சோறு சமைத்து விளையாடும் நோன்பின் பயன் உனக்குக் கிடைக்குமா? கிடைக்காதா? என தலைவன், தலைவியை நோக்கி வினவுகிறான் தலைவன் கூறும் கூற்றின் மூலம் பலவகை நோன்புகளைக் காண முடிகின்றது.

**1.தைநீராடல் நோன்பு**

**2.பிறர் மனைவாயிலில் பாடிப் பிச்சைஏற்று வழங்கிய நோன்பு**

**3.பொம்மைகளை வைத்துப் பாவைத் திருமணம் என்று மணற்சோறு சமைத்து விளையாடும் நோன்பு.**

**“வைஎயிற் றவர்நாப்பண் வகையணிப் பொலிந்து நீ**

**எய்திய பிறர்க்கு ஈத்த பயம்பயமக் கிற்பதோ?**

**ஆய்தொடி! ஐதுஉயிர்த்து “இவன் உள்நோய்யாது என்னும்?......**

இப்பாடலடிகளின் மூலம் நோன்பின் முக்கியத்துவத்தை உணரலாம்.

**தலைவன் தலைவி ஊடல்**

அகன்றவயலில் பறவைகள் ஒலிக்கின்றன.அதற்குப் போட்டியாக அங்கு விளைந்து முதிர்ந்த செந்நெல் கதிர்களும் காற்றில் ஆடி ஒன்றோடொன்று உரசி ஒலிக்கின்றன.அவற்றுக்கு இடையே முள் பொருந்திய தண்டில் தாமரை பூத்திருக்கிறது.ஒரு கதிர் தான் அசைந்த வேகத்தில் அந்தத் தாமரையை அடியோடு சாய்த்து அதன் இதழ் தனது உச்சியில் பொருந்த விளங்குகிறது.அக்காட்சி பலரும் பாராட்ட அரங்கில் நடனமாடும் பெண்ணின் தலையில் முன்புறத்தில் அழகாகச் செருகி வைத்த வயந்தகம் என்ற அணிகலத்தைப் போல் தோன்றுகிறது. அத்தகைய காட்சியை உடைய அழகிய வயல் சூழ்ந்த ஊருக்குத் தலைவனே கேள் என்று தலைவனை நோக்கித் தலைவி கூறுவது தலைவன் மீதான ஊடல் காரணமாக கூறியது.ஊடலுக்கான காரணத்தையும் கூறுகின்றாள்.

பரத்தையர் வீட்டில் அணிந்து கொண்ட அலங்காரத்தோடு இங்கு வந்திருக்கிறாய்! என் மகனைத் தூக்கி வைத்துக் கொள்ளாதே அவனுடைய சிவந்தவாயில் இருந்து சொரியும் நீர் உன்னுடைய மார்பை நனைப்பதால் “உன் அணியை வைத்து நீ சேர்ந்த பெண்யார்” என்று கண்டு பிடித்துவிடலாம் என்ற கருத்தால் உன்னுடைய மார்பில் பூசிய சந்தனத்தை அவ்வாறு கண்டு பிடிப்பதற்குத் துணை செய்வதாகக் கருதும் உனது காதலி தன் எண்ணப்படி கண்டுகொள்ள இயலாமல் அதற்காக ஊடல் கொள்வாள் என்றும்.

என் மகனைத்! அவன் உன் மார்பில் அணிந்த பலவடங்களோடு கூடிய முத்து மாலையை இழுத்து அறுத்து விடுவான்.அவ்வாறு அறுத்துவிட்டால் உன்காதலி அவ்வாறு அறிய முடியாமல் ஊடல்கொள்வாள் என்றும்.

பூப்போன்ற கண்களை உடையமகனைப் பொய்யாகப் பலமுறை கொஞ்சியவாறு என் மனையை விட்டுப் போகாமலும், அதே சமயம் உன் காதலியைப் பிரிந்திருக்க மனமில்லாமலும், வாயிலிலேயே நெடுநேரமாக நிற்காதே. பரத்தையர் சேரியில் அவளிடமே செல். அதற்கு முன்பாக என் மகனை என்னிடம் தந்துவிடு.ஏனென்றால் அவன் உன்னுடைய அணியைக் குலைத்துவிடுவான் என்று தலைவி தலைவனுடன் ஊடல் கொண்டு தன் துன்பத்திற்குரிய காரணங்களை சுட்டிக்காட்டுகிறாள்.

**“பூங்கண் புதல்வனை பொய்பல பாராட்டி**

**நீங்காய் இகவாய் நெடுங்கடை நில்லாதி**

**ஈங்குஎம் புதல்வனைத் தந்து”**

**ஏறுதழுவுதல்**

கார் காலத்தில் பேரொளியை எழுப்பி அடுத்தடுத்து இடிக்கும் பேரிடியைப் போல வாதிதியங்கள் முழங்கின.உயரே பரவலாக எழுந்துலாவும் மேகத்தை ஒப்ப மணப்புகை படர்ந்து. புறவிதழ் நீக்கிய மலர்களை நேர் நேராக வைத்துத் தொடுத்த மணம் மிகு மாலையை அணிந்து மங்கையர் வரிசையாக நின்றனர்.வீரச்சிறப்புடைய ஆயர் இளைஞர் தம்மினும் ஏறுகள் வலியவோ? என்று சினந்து அந்தப்

பகையுணர்வால் ஆரவாரித்து தூசி இடத்தை அடைத்துக் கொண்டு வானளாவ எழுந்து கண்ணை மறைக்க களத்தில் பாய்ந்தனர்.

அவ்வாறு பாய்ந்து ஏறின் கொம்பைப் பிடித்தும் மார்பு சேரத் தழுவியும் கழுத்தில் அடங்கியும் திமில் முறியத் தழுவியும் தமது தோள் நடுவில் அதன் கழுத்தை அகப்படுத்திப் பிடித்தும் கொம்பு தம் மேல் படுவதை ஏற்றக்கொண்டும் போரிட்ட இளைஞர்களை ஏறுகள் முட்டிக்கீழே தள்ளித் தமது கழுத்தைத் தழுவ விடாமல் விலக்கின.விடாமல் சென்று தழுவியதை எல்லாம் குத்திக்கொன்றன.அதன் பின்பு அவற்றை நெருங்குவோர் இல்லை. அத்தகைய ஒரு செவலக்காளை உயிர் தேயும் பொழுது அதனைத் தொடர்ந்து சென்று வதைத்துப் பறிக்கும் எமனைப் போன்று இருந்தது.

சில ஏறுகள் தம் அழகிய கொம்பால் தோன்றி எடுத்த பொதுவர்களின் குடல்களைக் பருந்து தூக்கிச்செல்ல அதன் வாயிலிருந்து அவை தவறி ஆலமரம் கடம்பமரம் ஆகியவற்றின் கிளைகள் தோறும் விழுந்து அவற்றில் உறையும் தெய்வங்களுக்குச் செய்யும் அணியாக இட்டு வைத்தவை போல் தோன்றின.இவ்வகையான ஏறு தழுவிய செயல் முடிந்தபிறகு இனங்களை தத்தம் மேய்ச்சல் நிலத்தில் செலுத்திய தம்முடைய அன்பு மிக்க காதலரோடு ஆய்ச்சியர் கையைக் கோத்துக் குரவைக் கூத்து ஆடுவர்.

ஏறுதழுவுதற்குத் திருமணம் ஒரு காரணமாகக் கூறப்பட்டாலும் ஏறுகளை இயல்பான வாழ்க்கையில் செலுத்துவதற்காக அந்த வீரச் செயல் இன்றியமையாதாகியது என்பதும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

**மடல் ஏறுதல்**

தாம் காதலிக்கும் பெண்ணின் ஓவியத்தை கையில் வைத்துக் கொண்டு தம் காதலைக் குறித்துப்பாடுவர் என்பது இங்கு தெரியப்படுகிறன்றது.அப்பாடலைக் கேட்டு ஊர் பெரியோர் அது என்ன என்று உசாவி அவ்வாடவரின் வேண்டுகோளை நிறைவேற்றுவர் என்பதும் அறியப்படுகிறது.எனவே மடலேருதல் என்பது ஊர்ப்பெரியோர்க்கு தம் கருத்தினைத் தெருவிக்கும் ஒரு வகையாகும்.

நூலில் அழகிய மயில் இறகு பூளைப்பூ ஆவிரம் எருக்கம் ஆகியவற்றைத் தொடுத்து மடற் குதிரையின் கழுத்தில் கட்டி அப்பெண்ணினது ஊர்த்தெருவில் அம்மடலை இழுத்து இங்குள்ள எல்லாரும் இவளை இவன் பாடுவதை கேளுங்கள் என்று கூறிப்பாடுவதே வழியாகும்.

ஒளி பொருந்திய அணிகலன்களை உடையவள் என் காதலுக்குப் பரிசாக விரும்பித்தந்தவை என் நெஞ்சு நிறைந்த கவலையும் கருக்கு நிறைந்த பனமடற் குதிரையுமே ஆகும்.

இந்த ஏமாற்றத்தால் அவள் எனக்குரியதாக யான் தாங்கும் அளவன்றித் தந்துவிட்டதும் என் இயல்புகள் அழிவதற்குக் காரணமாகி விட்டதும் ஆகிய காமநோயில் என் உயிர் அழுந்தி அடுப்பில் எண்ணெய்ச்சட்டியில் கிடக்கும் மெழுகென உருகி மெல்ல தேய்கிறது.

இத்துன்பத்தை கேட்பார் யாரும் இல்லையாக மனம் வருந்தி இருக்கத் இங்குத் திரியும் அயலாரும் சிறுவருமே யான் உற்ற துன்பத்தைப் பரிமாறிக் கொள்ளக் கிளைத்த துணையார் என் பாடுதலை மடலேறுதலின் முக்கியக் கருத்தாக அமைகின்றது.இதனைப் பின்வரும் பாடலடிகள் சுட்டிக்காட்டுகின்றது.

**“மணிப்பீலி சூட்டிய நூலொடு மற்றை**

**ஆணிப்பூளை ஆவிரை எருக்கொடு பிணித்துயாத்து**

**மல்லல் ஊர் மறுகின் கண் இவட்பாடும் இ∴து தத்தன்**

**தேனாள் எமக்கு ஈத்த பூ!”**

**முடிவுரை**

மேற்கூறப்பட்ட கருத்துக்களில் இருந்து சங்ககால மக்களின் திருமண முறையில் ஏறுதழுவுதல் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதையும் தலைவன் தலைவி ஊடல் மடலேருதல் முறை பற்றியும் அறியமுடிகிறது.

.

# நான்மணிக்கடிகையில் மனித வாழ்வியல் நெறிகள்

***முனைவர் ப.அலிஸ் ராணி,** தமிழ்த்துறை, சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி

**முன்னுரை:**

குறிக்கோளை உடையது இலக்கியம், இலக்கியம் மனித வாழ்க்கை அடிப்படையில் உருவாகின்றது. இந்த வகையில் உருவாகும் இலக்கியத்திற்குள்ளும் மனித வாழ்க்கைக்குத் தேவையான நெறிகள் பல உள்ளன. அறத்தை வலியுறுத்தும் கீழ்க்கணக்கு நூல்கள் ஒவ்வொன்றும் அறத்தின் வெற்றியை வலியுறுத்தும் வாழ்க்கை நூல்கள் ஆகும். இதில் நான்மணிக்கடிகை உணர்த்தும் மனித வாழ்வியல் நெறியினை விளக்குவதே இக்கட்டுரையின் பொருளாகும்.

**நான்மணிக்கடிகை:**

சங்கம் மருவிய காலத்தில் தமிழர்களின் ஆட்சியில் ஒரு கலக்கம் நேர்ந்தது. வாழ்க்கை தரும் இன்பங்களை இலக்கியப் பாடுப் பொருளாகப் பாடுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அந்தக் காலத்தில் (கி.பி.100 முதல் கி.பி 500 வரையில்) இயற்றப்பட்ட சில நூல்களைப் பதினெண்கீழ்க்கணக்கு என்று குறிப்பிட்டார்கள். (மு.வரதராசனார், தமிழ் இலக்கிய வரலாறு, ப.85) இந்தக் கீழ்க்கணக்கு நூல்களில் விளம்பி நாகனாரால் பாடப்பட்ட நூல் நான்மணிக்கடிகை. இந்நூல் ஈகை, செல்வம் நிலையாமை, நட்பு, சினம், நாவன்மை, அரசியல், பெண்மை, தூய்மை, அறிவுடைமை போன்ற நெறிகளை எடுத்துரைத்துள்ளது.

**ஈகை:**

அறங்களில் சிறந்தது ஈகை, ஈகை செய்வோரின் மனநிலை, அதனால் ஏற்படும் பயன், ஈகை செய்யாதோர் அடையும். இழிநிலை ஆகியவை பற்றிய பல்வேறு கருத்துக்கள் நான்மணிக்கடிகையில் இடம்பெற்றுள்ளன.

**"திருவின் திறலுடையதில்லை – ஒருவற்க்குக்**

**கற்றலின் வாய்த்த பிறவில்லை எற்றுள்ளும்**

**இன்மையின் இன்னாத தில்லை யில்லென்னாத**

**வன்மையின் வண்பாட்ட தில்"** (நான்மணிக்கடிகை 32)

திட்பமான மனவுறுதியை ஒருவன் பெறவேண்டும் என்றால் ஈகையில் சிறந்தவனாக மாறவேண்டும் என்கிறது. மேலும், ஈகை செய்வதால் ஏற்படும் பயன் செல்வத்தால் உயர்வர். பிறந்த குடியில் சிறப்படைவர் (மேலது 72) என்கிறது.

ஈகை செய்வது சிறப்பானது தான். எனினும், ஈவார்க்கு நான்மணிக்கடிகை சில அறிவுரைகளை வழங்குகிறது. தன்னிடம் பொருள் வருவாய் இல்லாத காலத்தில் பிறர்க்கு உதவி செய்தாக வாக்களிக்கக் கூடாது என்றும், அவ்வாறு வாக்களிப்பது பிழை என்றும் கூறுகிறது. இக்கருத்தை

**"வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்"** (மேலது 94)

என்ற வரிகள் சிறப்பாக எடுத்துரைக்கின்றது

**செல்வம் நிலையாமை**

உலக வாழ்க்கையின் இன்றியமையா தேவைகளுள் ஒன்று செல்வம். அந்தச் செல்வம் நிலையாமை தன்மையுடையது என்கிறது நான்மணிக்கடிகை. ஆசையே துன்பத்திற்குக் காரணம். இந்த ஆசையைத் தூண்டுவது செல்வமேயாகும். செல்வம் மிகப் பெற்றவர்கள் தம் உறவினர்களை அதிகம் மதிக்கமாட்டார்கள். ஆனால், அவர்களின் செல்வம் ஒருநாள் அவர்களை விட்டுச் சென்றபின் கீழ்நிலையில் உள்ள உறவினர்கள் செய்யும் உதவியைக் கண்டு நெஞ்சம் நெக்குருகி நிற்பர்.

**"மண்ணியறிப மணிநலப் பண்ணமைத்து**

**ஏறிய பின்னறிப மாநலம் மாசறச்**

**சுட்டறிப் பொன்னின் நலங்காண்பார் கெட்டறிய**

**கேளிரான் ஆய பயன்"** (மேலது 70)

நிலையில்லா செல்வம் அவர்களை விட்டுச் சென்றதால் தான் இதனை உணரமுடிகின்றது.

இதைப் போல்

**"கைத்தலான் நல்லவர் கைத்துண்டாய்க் காப்பாரின்**

**வைத்தாரின் நல்லர் வறியவர்"** (மேலது 70)

தீயோரிடம் சேரும் செல்வம் யாருக்கும் பயன்படாமல் அழிந்து போகும் என்கிறது.

செல்வமும் குடிப்பிறப்பும் வகையால் பொருந்தி நில்லாது,

**"திருபுந் திணை வகையான் நில்லா"** (மேலது 42)

**"மிகுதி இறுவாய செல்வங்கள்"** (ஆமலது 19)

மீறிய செயல்களைத் தொடங்கியதும் செல்வம் கெடும் என்கிறது.

**சினம்:**

மனிதர் தம் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி வாழும் போது அவர்களின் வாழ்வில் வெற்றியை ஈட்டுகின்றனர். அவ்வாறன்றி உணர்வுகள் தம்மை ஆட்சி செய்ய தாம் அவற்றினை அடக்கி ஆளாமல் விட்டுவிட்டால் பெரும்பழி வந்து சேரும் 'சினம்' என்னும் தீயப்பண்பை ஒவ்வொருவரும் கட்டுப்படுத்தி வாழ முயலுதல் வேண்டும்.

**"சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க**

**கூறல் லவற்றை விரைந்து"** (மேலது 3)

என்று வறுமைமிக்க குடியிற் பிறந்தவர்கள் செய்யும் பிழைக்கண்டு சினம் கொள்ளல் கூடாது கூறுவதோடு பிறர் செய்யும் நன்மைகளைப் பெரிதும் நினைத்துப் பார்க்க வேண்டும் (மேலும் 10) என்ற கருத்தையும் எடுத்துரைக்கின்றது.

உலகில் உண்டாகும் நன்மைகள் எல்லாம் சினம் கொள்பவர்க்கு கிடைக்க வாய்ப்பில்லை.

**"கற்றார் முன் தோன்றா கழிவிரக்கங் காதலித்தொன்று**

**உற்றார்முன் தோன்றா உறாமுதல் - தெற்றென**

**அல்ல புரிந்தார்க்கு அறந்தோன்றா எல்லாம்**

**வெகுண்டார்முன் தோன்றா கெடும்"** (மேலது 70)

**நட்பு:**

அன்பின் முதிர்ந்த நிலை நட்பு. அதிலும்,

**"பெருக்குக நட்டாரை நன்றின்பா லுய்த்துத்**

**தருக்குக வொட்டாரை காலமறிந்தாங்கு"** (மேலது 69)

நல்ல நட்பு நண்பரையும், பகைவரையும் அடயாளப்படுத்திக் காட்டிவிடும். நல்ல நண்பர்களைத் தெரிவு செய்து நட்பு கொண்டபின் அவர்கள் செய்யும் சிறுதவறையும் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்கிறது. நல்ல நண்பர்களுக்குப் பொறுமை அவசியம் தேவை.

**"சிறந்தார்க் கரிய செறுதடிலஞ் ஞான்றும்"** (மேலது 51)

பொய் பிறக்கும்போது நட்பு கெட்டுவிடும். நட்பு கெடும் சூழல் ஏற்படின் அதை தவிர்க்கும் வழியினை ஆராய்ந்து அதன்படி நடக்க வேண்டும்.

ஒருவனை நட்பாகக் கொண்டு பின்பு அந்நட்புக் கெட அவனுக்கு எதிராகப் புறங்கூறுதல், அவனைக் கொலை செய்வதற்குச் சமமாகும்.

**"பிறனை கொலையொக்குங் கொண்டுகண் மாறல்"** ஆகவே நல்ல நண்பர்களையும் தீயவர்களாக மாற்றும் இக்காலச் சூழலில் அதற்கு இடங்கொடுக்காமல் வாழ வேண்டும் என்ற கருத்தினை முன்மொழிகிறது நான்மணிக்கடிகை.

**அறிவுடைமை:**

மனிதன் தன் புலன்களின் வழியே அறிவைப் பெறுகின்றான். அவ்வறிவு நன்மையுடையதாக அமையுமானால் அதனை 'அறிவுடைமை' எனலாம். அறிவுடைமையானது செயற்கையாகிய கல்வி கேள்விகளாகிய நூலறிவோடு இயற்கையாகிய மதிநுட்பமும் உடையவராதல் எனலாம்.

கல்வி கற்றவர்களே வாழ்வில் சிறப்புப் பெறுவர். மரக்கலமுடையார் கடலின் ஆழமான நீரைப் பிளந்து செல்வர். மறவர் படைக்கடலையும் தற்காப்புடையின் தவக்கடலையும் நீந்திக் கரையேறுவர். அது போலவே தெளியக் கற்றவன் கற்றறியுடையார் நிரம்பிய அவைக் கடலைத் தாண்டி விடுவான் என்றும் ஒருவன் அறிவு நூல்களைக் கற்பதனால் மிக்க அறியாமை குறையப் பெறுவான் என்றும் குறிப்பிடுகின்றது.

அறிஞர் பயனுள்ளவையெனக் கல்வி கேள்விகளாற் தெளிந்தவற்றையே செய்வர், சான்றோர் பிறர் விரும்பியவற்றுள் இனிமையாயினவற்றையே செய்வர். கல்வியறிவுடையவர்களை அன்பால் விரும்புகின்றவர்கள் அக்கல்வியறிவு உடையவர்களை ஒப்பர், கீழ்மையறிவுடையவர்கள் பாம்பு உள்ளே மறைந்து வாழும் புற்றை ஒப்பர் (மேலது 58)

**"மனைக்கு விளக்கம் மடவார் மடவார்**

**தமக்குத் தகைசால் புதல்வர் மனக்கினிய**

**காதற் புதல்வர்க்குக் கல்வியே கல்விக்கும்**

**ஓதிற் புகல்சால் உணர்வு"** **(மேலது 105)**

என்ற பாடல் பெற்றோர் மனத்திற்கு இனிமை தரும் அன்பிற்குரிய மக்கட்கு கல்வியறிவே ஒளியாகும். அக்கல்வியறிவிற்கும் சொல்லுமிடத்துப் புகழ் நிறைந்த மெய்யுணர்வே ஒளியாகும் என்கிறது.

அறிவு என்பது மனிதனுக்கு மிகவும் இன்றியமையாததாகும். அந்த அறிவைத் தரும் கல்வியறிவு இல்லாதவர் குருடர்க்குச் சமானம் ஆவர். குடும்பத்தில் மூத்தவராயினும் சிறியோர் மதிக்கமாட்டார்கள் படியாத அறிவிலான் இடையில் தளருவானானால் முயற்சி கெட்டு அழிவான்.

**"வாலிழையார் முன்னர் வனப்பிலார் பாடிலர்**

**சாலும் அவைப்படிற் கல்லாதான் பாடினான்**

**கற்றான் ஒருவனும் பாடியனே கல்லாதார்**

**மேதையார் முன்னர்ப் படின்"** **(மேலது 99)**

என்கிறது நான்மணிக்கடிகை.

**நாவன்மை:**

மனிதன் தன் நாவை அடக்கும் முறை குறித்தும் மனிதன் பேசும் கொடுஞ்சொற்கள் குறித்தும் நான்மணிக்கடிகை கூறியுள்ளது. சுவைக்கினியதை யாவரும் நாவினால் சுவைத்தறிவர். அத்தகைய சிறப்பு வாய்ந்தது 'நா' ஆகும். இதன் மூலம் இன்சொல்லினைப் பேசுவது இனிமையானதாகும். இதைப்போல் தீயப்பேச்சினால் வரும் துன்பத்தினை நான்மணிக்கடிகை பதிவு செய்யாமல் இல்லை.

**"எள்ளற்க என்றும் எளியாரென் றென்பெறினும்**

**கொளளற்க கொள்ளார்கைம் மேலவா உற்சாடினும்**

**சீறற்க சிற்றின் பிறந்தாரைக் கூறற்க**

**கூறல் லவற்றை விரைந்து"** **(மேலது 78)**

என்ற பாடல் மூலம் விளக்குகின்றது.

மனிதனுக்கு நாவடக்கம் மிகவும் தேவை. நாவே துன்பத்திற்குக் காரணம். ஆகவே நாவினை அடக்க வேண்டும் என்பதை பின்வருமாறு கூறுகின்றது.

பதறிப்பேசும் நாக்கு நேசத்தைக் கெடுக்கும் என்பதை

**"நாவன்றோ நட்பறுக்கும்"** **(மேலது 81)**

மேலும்

**"இன்சொலான் ஆகும் கிழமை இனிப்பிலர்**

**வன்சொலான் ஆகும் வசைமனம் - மென்சொலின்**

**நாவினால் ஆகும் அருள்மனம் அம்மன்த்தான்**

**வீவிலா விடாய் விடும்" (மேலது 106)**

என்ற பாடல் மூலம் இன்சொலால் ஒருவற்கு நட்புரிமை உண்டாகும். இன்பமில்லாத வன்சொல்லினால் கெட்ட கருத்து உண்டாகும் என்றும், நயமான சொல்லையுடைய நாக்கினால் இரக்க எண்ணம் உண்டாகும் என்றும் கூறி அருள் நெஞ்சத்தால் அழிதலில்லாத வீடு பேறுண்டாகும் என்று நாவடக்கம் பற்றி கூறுகின்றது நான்மணிக்கடிகை.

**முடிவுரை:**

மனித வாழ்வுக்கு வேண்டிய தலையாயப் பண்புகளைப் பற்றி நான்மணிக்கடிகை பேசினாலும் இவ்வுலக வாழ்வியல் கண்கொண்டு கருத்துரைத்துள்ளது. மனித வாழ்வில் உள்ள கசப்பான சில உண்மைகளை முன்வைத்து நற்பண்புகளைப் புகட்டுகின்றது. எமன் பிடியிலிருந்து மனிதன் தன்னைக் காத்துக் கொள்ள அவன் நற்குணங்கள் கொண்டொழுக வேண்டுமென்று ஒரு வகையான அச்சுறுத்தலோடு கருத்துரைத்துள்ளது. ஈகை, செல்வம் நிலையாமை, நட்பு, சினம், கல்வியறிவு, நாவன்மை என்று வாழ்வியல் சிந்தனைகள் பலவற்றை தன்னகத்தே கொண்ட நூல் நான்மணிக்கடிகை எனலாம்.

# நாலடியார் உணர்த்தும் தனிமனித வாழ்வியல்

***ப.வருதராஜ்,** முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்), தமிழாய்வுத்துறை, கந்தசாமிக்கண்டர் கல்லூரி, வேலூர்-நாமக்கல்.

**முன்னுரை**

தனிமனிதனின் வாழ்வில் சிறந்த ஒழுக்க நிலையினையும், அறத்தின் இயல்பையும் நாலடியார் உணர்த்துகின்றது. விண்ணுலக வாழ்வை இம்மண்ணுலகில் பெற அவன் மேற்கொள்ள வேண்டிய வாழ்வியல் விழுமங்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தனிமனிதனின் வாழ்வியல் நெறிமுறைகள்**

1. பொறையுடைமை
2. பிறன்மனை நயவாமை
3. ஈகை
4. மெய்ம்மை
5. தீவினை அச்சம்
6. அறன் வலியுறுத்தல்

ஆகிய இவை அனைத்தும் பெற்றுச் சிறப்புற்று வாழ்வதே வாழ்வியல் நெறிகளாகும் என நாலடியார் கூறுகின்றது.

**பொறையுடைமை**

நாலடியாரில் பொறையுடைமை பற்றிய பத்துப்பாடல்களும் மனிதனின் வாழ்வியல் நெறிகளுக்கு ஊக்கம் தருகின்றன. அறிவில்லாதாரிடம் சேர்ந்து பழகாமலும் சொற்களைப் பேசாமலும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றது. தனிமனிதனின் அணுகுமுறைகளின் அடிப்படையில் பொறையுடைமை மனித இனத்தின் வாழ்வியல் நெறிகளை இப்பாடல் மூலம் அறியலாம்.

**"அறிவ தறிந்தடங்கி அஞ்சுவ தஞ்சி**
**உறுவ துலகுவப்பச் செய்து-பெறுவதனால்**
**இன்புற்று வாழும் இயல்பினார் எஞ்ஞான்றும்**
**துன்புற்று வாழ்தல் அரிது"**

**பிறன்மனை நயவாமை**

நாலடியார் அறக்கருத்துக்களாக பிறன்மனை நயவாமையை அறிவுறுத்துகின்றது. காமம் எந்நாளும் பாவத்தைத் தரும் இழிவுச் செயலாகும். ஆதலால் நாணமுடையவர்கள் பிறன் மனைவியை நாடாது இருக்க வேண்டும் எனச் சுட்டுகின்றது. மேலும் மணமுரசு கொட்டி மணம் புரிந்த நல்லாளை விடுத்துப் பிறர் மனைவியை விரும்புவது மிகவும் இழிந்த செயல் எனக்

கடிந்துரைக்கின்றது. மற்றொரு பாடலில் அயலார் பழிக்க, சுற்றத்தார் வருந்த, பிறர் மனைவியை விரும்புதல் இப்பாடல் அறிந்து கொள்ளலாம்.

**"அம்பல் அயல்எடுப்ப அஞ்சித் தமர்பரீஇ**

**வம்பலன் பெண்மரீஇ மைந்துற்று-நம்பும்**

**நிலைமைஇல் நெஞ்சத்தான் துப்புரவு, பாம்பின்**

**தலைநக்கி யன்ன துடைத்து"**

**ஈகை**

இல்லாதவருக்குக் கொடுப்பதே ஈகையாகும். பிறரிடத்தில் எதிர்பார்த்துக் கொடுப்பது ஈகையாகாது.

**"இல்லா இடத்தும் இயைந்த அளவினால்**

**உள்ள இடம் போல் பெரிதுவந்து-மெல்லக்**

**கொடையொடு பட்டகுணனுடைய மாந்தர்க்கு**

**அடையாவாம் ஆண்டைக் கதவு"**

எனக் கூறுவதிலிருந்து பொருளில்லாத போதும் பிறருக்கு உதவுவதால் மறுமைப்பயன் உண்டு என வலியுறுத்துகின்றது.

**மெய்ம்மை**

பொருள் உள்ளவன் அறம், இன்பம் ஆகிய இரண்டையும் பெறுவான். பொருள் இல்லாதவன் அறம் முதலிய உயர்பண்புகளை இழப்பான் என்னும் கருத்து ஒரு பாடலில் கூறப்பட்டுள்ளது. மற்றொருபாடலில் ஒரு காணரமுமின்றிப் பழிப்பவரை அவர் எதிரிலேயே கண்டிப்பது மட்டுமன்றி புறங்கூறிப் பயனில்லை என்ற கருத்தையும் உணர்த்த வேண்டும் எனக் கூறுகின்றது. பசுவின் நிறங்கள் வெவ்வேறாக இருந்தாலும் பாலின் நிறம் ஒரே தன்மையுடையதாகும். அதை போன்று அறப்பயனும் ஒரே தன்மையுடையதாகும். ஒருவருடைய வினையே அவரைத் தொடர்ந்து வரும் என்னும் கருத்தை பின்வரும் பாடல் உணர்த்துகிறது.

**"ஆவே றுருவின வாயினும், ஆபயந்த**

**பால்வே றுருவின வல்லவாம்:-பால்போல்**

**ஒருதன்மைத் தாகும் அறநெறி, ஆபோல்**

**உருவு பலகொளல் ஈங்கு"**

**தீவினை அச்சம்**

தீயன செய்ய மனம் அஞ்சுதல் வேண்டும். இல்லையெனில் பாவமே மிகுதியாக உருவாகும் என்று கூறுவதோடு உயிர்க் கொலை போன்றவற்றினால் மனித மனமானது தீவினைப் பயனை அடையும் என நாலடியார் கூறுகின்றது. அத்துடன் புலால் உண்பது தீவினைகளில் தலையாயது என்றும் நெறி தவறாதவரும் தீவினையாளரைச் சேரும் போது கொடுந் தொழில் செய்பவர் ஆவார் என்றும் எனவே சிற்றினம் சேரக்கூடாது என்ற கருத்தை நாலடி வலியுறுத்துகின்றது.

**"பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்**

**வரிசை வரிசையா நந்தும்-வரிசையால்**

**வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே**

**தானே சிறியார் தொடர்பு”**

**அறன் வலியுறுத்தல்**

நம்மிடமுள்ள செல்வங்களைப் பிறருக்குக் கொடுத்து நற்பெயரினைத் தேடிக் கொள்ளுதல் என்றென்றும் நிலைத்து நிற்கும் எனலாம். அறன் வலியுறுத்தலை ஐந்து நிலைகளாகப் பிரிக்கலாம்.

1. நல்வழியில் வாழ்தல்
2. துறவு நெறியினை மேற்கொள்ளல்
3. துயர் நீக்கல்
4. வறியவர்க்கு உதவுதல்
5. பொருட் பயன் அளித்தல்

ஆகிய நிலைகளில் அறியலாம்.

**1. நல்வழியில் சேர்தல்**

**“பரவின்மின் பற்றன்மின் பாத்துணர்மின் யாதுண்**

**கரவின்மின் கைத்துண்டாம் போழ்து”**

என்ற பாடல் வரிகள் நல்வழியில் வாழ்தலைப் பற்றி விளக்குகின்றன. மிகுந்த பொருள் இருக்கும்போது மேலும் பொருள் தேடி அலையாமலும், தன் பொருளை மறைத்து வைக்காமலும் அனைவருக்கும் வழங்கி வாழவேண்டுமென்று உணர்த்துகின்றது.

**2. துறவுநெறி**

மனதிற்கு நிம்மதி கிடைக்க இறைவனின் அருளைத் தேடி துறவு நெறியில் ஈடுபட்டால் அன்பு கிடைக்கும் என்பதை,

**“இது நாமென்று மவாவினைக் கைவிட்டுப்**

**போவதே போலும் பொருள்”**

என்னும் செய்யுள் உணர்த்துகின்றது.

**3. துயர்நீத்தல்**

வறுமையில் வாடினாலும் பிறர்துயர் துடைப்பவன் என்றும் பெருந்துயரத்தில் இருக்கமாட்டான் என்பதை இச்செய்யுள் விளக்குகின்றது.

**“முக்குற்றம் நீக்கி முடியும் அளவெலாம்**

**துக்கத்துள் நீக்கி வரும்”**

காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று குற்றங்களைச் செய்பவர் வாழ்வில் துயரம் வாட்டும். எனவே பாவம் நீங்க பொருள் உதவி செய்தால் மகிழ்ச்சியாக வாழலாம் எனக் கூறுகின்றது.

**4. வறியவர்க்கு உதவுதல்**

நல்ல வசதி படைத்தவர்கள் ஏழைகளுக்குப் பொருள் கொடை செய்தால் அவர்களை உலகத்தார் தெய்வத்துக்குச் சமசமாக எண்ணுவர். பிறருக்கு உதவ நினைப்பவர்கள் தம்

சொந்தச் செல்வத்தைத் தானம் செய்ய வேண்டும். அவ்வாறு உதவி செய்பவர்களை இப்புவி மகிழ்ச்சியுடன் தாங்கும் என நாலடியார் உரைக்கின்றது.

**5. பொருட்பயன் அளித்தல்**

**"பொருளும் அவனை நகுமே உலகத்து**

**அருளும் அவனை நகும்"**

என்னும் பாடல் அடிகள் பொருட் பயனை அறிவுறுத்துகின்றது. தன் செல்வத்தைத் தானும் அனுபவிக்காமல் பிறருக்கும் அளிக்காமல் உயிரை விடுபவரைக் கண்டு அவன் சேர்த்துவைத்த செல்வமே நகைக்கும். பொருள் நிலையற்றது என உணர்ந்து அதை நேர்வழியில் செலவழித்தல் வேண்டும்.

**முடிவுரை**

தனிமனிதர்கள் ஒவ்வொருவரும் மேலே சொல்லப்பட்ட நாலடியாரின் வாழ்வியல் நெறிமுறைகளைப் பின்பற்றி வாழவேண்டும். அத்துடன் நம் நற்செயல்கள் பிறருக்குப் பயன்தரும் வகையில் அமைந்தால் இறைவன் மறு உலக வாழ்வின் மகிமையைத் தருவார் போன்ற உண்மைகளை நாம் அறிந்து கொள்ளலாம்.

# வைரமுத்து கவிதைகளில் அறச் சிந்தனைகள்

*முனைவர் தா.லதா, உதவிப்பேராசிரியர், புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 620 002.

**முன்னுரை**

இலக்கியவாதிகள் சமூகத்தின் மீது கொண்ட அக்கறையினால் நசுக்கப்பட்டவர்களின் நியாயங்களை எழுத்துக்களின் மூலம் எடுத்துரைக்கின்றனர். வானம்பாடிக் கவிஞர்களின் காலம் முதல் சென்ரியூ, குக்கூ என இக்காலம் வரையிலும் புதுக்கவிஞர்களின் சமூக அக்கறை எழுத்தின் மூலம் வெளிப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

தமிழ்த்திரையுலகில் மட்டுமின்றிப் புதுக்கவிதை உலகிலும் சாதனைகள் படைத்துவரும் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் கவிதைத் தொகுப்பில் அறச்சிந்தனைகள் ஆழ்ந்துக் கிடப்பதை இக்கட்டுரையில் காண்போம்.

**நற்சிந்தனை**

மனித வாழ்வை, ஒவ்வொரு தனிமனிதனின் எண்ணங்களும், செயல்களுமே தீர்மானிக்கின்றன. நற்சிந்தனை இருந்தால் தனிமனித ஒழுக்கம் வரும், ஒழுக்கம் சமூகத்தை உயர்த்தும் என்பதை

**“எண்ணங்கள் வான்நோக்கி உயர வேண்டும்**

**எழுத்தெல்லாம் சுடராகி எரிய வேண்டும்**

**பெண்ணென்றால் தாயென்று பார்க்க வேண்டும்**

**பெரியோரை அறிகின்ற பெற்றி வேண்டும்**

**வண்ணங்கள் தெரியாத பார்வை வேண்டும்.**

**வயதுக்குச் சரியான வாழ்க்கை வேண்டும்”. [ரத்த தானம்]**

ஏனக்கூறி எண்ணத்தாலும், எழுத்தாலும் மாற்றத்தைக் கொண்டு வந்தால் சமூகம் உயரும் என்பதை இங்கு சுட்டிக் காட்டுகிறார். மேலும்,

**“பொய் சொன்னால் சுடுகின்ற நாவும் வேண்டும்**

**போராடி வெல்கின்ற புலமை வேண்டும்**

**கையிரண்டும் உழைக்கத் தான் கவனம் வேண்டும்**

**காலத்தின் மாற்றத்தை மதிக்க வேண்டும்” [ரத்த தானம்]**

பொய்யில்லாத வாழ்வும், கைகளின் உழைப்பும் இச்சமூகத்தை உயர்த்தும் என்ற கருத்தினை வலியுறுத்துவதைக் காணலாம்.

**அறம் வெல்லும்**

சமூகத்தில் நடைபெறக்கூடிய அவலங்கள், ஏமாற்றங்கள், சீர்கேடுகள் அனைத்திற்கும் சரியான விளக்கத்தையும், பதிலடியையும் அறம் நிலை நிறுத்தும் என்னும் கருத்தினை

**“உங்கள் மேடை**

**உங்கள் நாக்கு**

**எது வேண்டுமானாலும் பேசுங்கள்**

**உங்கள் தராசு**

உங்கள் எடைக்கல்

எது வேண்டுமானாலும் விமர்சியுங்கள்

உங்கள் சுவர்கள்

உங்கள் காகிதம்

எது வேண்டுமானாலும் ஒட்டுங்கள்

ஆனால்....

நாளை.....

காலத்தின் விமர்சனம்

உங்கள் பிணங்களைக் கூடத்

தோண்டியெடுத்து வந்து

தூக்கில் போடும்

ஞாபகம் இருக்கட்டும்" [திருத்தி எழுதிய தீர்ப்புகள்]

பொறுத்தல் நலம்

எல்லாக் காரியங்களிலும் அவசரப்பட்டு எடுக்கும் நடவடிஎக்கைகளால் நிமமதி இழந்து சண்டை ஏற்படுவதைத் தவிர்க்க, ஒவ்வொரு தனி மனிதனுக்கும் பொறுமை அவசியம் என்பதை

"நாவே

இன்னும் கொஞ்சம் மௌனம் கா

வாயில்லாச் சில்லறைகள் சத்தமிட்டாலும்

வாய்திறந்தும் பேசாத சுருக்குப்பை போல

எண்ணமே

நலிந்த பொழுதிலும் நம்பிக்கை கொள்

தட்டான் தட்டலில்

உதிரும் தங்கமும்

நகையாகுமென்று நம்புதல் போல

தோளே

இன்னும் சிரமம் தாங்கு

ஊருக்கு நிழல் வழங்க

தன் தலையில் வெயில் தாங்கும்

இருட்சம் போல" [பெய்யெனப் பெய்யும் மழை]

ஜாதியில்லாச் சமூகம்

வளர்ந்துவரும் சமூகத்தில் 'சாதி' என்னும் வேர் இன்னும் பிடுங்கப்படாமல் கிளைகளாய் படர்ந்து இளைய சமூகத்தைப் பாதிக்கும் நிகழ்வுகள் மாற வேண்டும் என்னும் கருத்தினை,

"புத்தகம் ஈந்து கல்விச் சாலை

போக்கும் சிறுவர்களைக் - கையில்

கத்திகள் தந்து ஜாதிக் களத்தில்

கருகச் செய்வீரோ?

மனிதன் என்னும் நிஜத்தை நீங்கள்

மறந்து தொலைத்துவிட்டு – ஜாதிச்

சனியன் என்னும் கற்பனைக் காகச்

**சமர்கள் புரிகுவதோ?**

**முன்னே வள்ளுவன் பின்னே பாரதி**

**முழங்கினர் ஊருக்கு – அட**

**இன்னும் நீங்கள் திருந்தா விட்டால்**

**இலக்கியம் ஏதுக்கு? [பெய்யெனப் பெய்யும் மழை]**

இலக்கியங்களின் வழி அறத்தினை எடுத்துரைக்கும் போதிலும், ஓயாத சாதிச் சண்டை ஒழிய வேண்டும் என்பதே கவிஞனின் கனவு.

**வார்த்தையில் அறம்**

பேசுகின்ற ஒவ்வொரு சொல்லையும் ஒட்டடைத் தட்டி பேசினால் தூசு எனும் மாசு படியாது. வார்த்தை மாறினால், வாழ்க்கை மாறும் எனும் நம்பிக்கையில்

**“தோல்வி என்னும் சொல்லைத் தொலைத்து**

**விலகி நிற்கும் வெற்றியென்றுரைப்போம்**

**இலைகள் கழிந்த கிளைகள் கண்டால்**

**அடுத்த வசந்தம் ஆரம்பம் என்போம்**

**…. …. …. …. ….**

**எதிர்மறை வார்த்தைகள்**

**உதிர்ந்து போகட்டும்**

**உடன்பாட்டு மொழிகள்**

**உயிர் கொண்டெழட்டும்**

**புளித்த வார்த்தைகள் மாறும்போது**

**சலித்த வாழ்க்கையும்**

**சட்டென்று மாறும்” [பெய்யெனப் பெய்யும் மழை]**

வாழ்வு சலிப்படையாமல் இருக்க, சத்தான வார்த்தைகளை நேர்மறை எண்ணங்களோடு எடுத்துரைக்க இனிய வாழ்வு மலரும் எனக் கவிஞர் கூறுகிறார்.

**இயற்கையை பாதுகாத்தல்**

அறவுணர்வு என்பது மனிதத்தின் மீது மட்டுமல்லாமல் இயற்கையின் மீதும் தான். இயற்கைக்கு எதிரான செயல் அறத்திற்கு எதிரானச் செயல் என்பதை,

**“பறவைக்கும் விலங்குக்கும்**

**மரம் தரும் உத்ரவாதம்**

**மனிதர் நாம் தருவோமா?**

**மனிதனின் முதல் நண்பன்**

**மரம்**

**மரத்தின் முதல் எதிரி**

**மனிதன்”**

என இயற்கையை கொன்றழிக்கும் மனிதனைச் சாடுகிறார்.

**தொகுப்புரை**

தனிமனித ஒழுக்கத்தின் மேன்மையையும், சமூகத்தில் அறம் வெல்லும் என்பதையும், எல்லா நேரங்களிலும் அமைதியாய், பொறுமையுடன் இருந்தால் விருட்சம் போல் வளரலாம் என்றும், ஜாதிகளற்ற சமூகத்தையும், இயற்கை வளத்தை அழிக்காமல் பேணி காத்தலையும் போன்ற சமூகத்திற்குத் தேவையான அறக் கருத்துக்களை கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் கவிதைத் தொகுதிகளில் காண முடிகிறது.

# ஆற்றுப்படை இலக்கியத்தில் விருந்தோம்பல்

*முனைவர் க.கிருஷ்ணவேணி, தமிழ்த்துறை, உதவிப் பேராசிரியர், வ.உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி.

**முன்னுரை**

பண்பாட்டைப் போற்றி வாழ்ந்தவர்கள் பண்டையத் தமிழர்கள். இன்றும் அப்பண்பாட்டின் மரபுநிலை தொடர்கிறது. அவர்கள் போற்றிய பண்புகளில் தலையாய பண்பு விருந்தோம்பல். அக்கால மக்கள் விருந்தோம்புவதில் விரும்பத்தக்கவர்களாக, முன் அறியாதவர்களையும், உறவுகளையும் அகமும், முகமும் மலர வரவேற்று விருந்தோம்பினர். இப்பண்பாடு தொல்காப்பியர் காலத்திலேயே போற்றப் பெற்றது என்பதை

**"புகாஅக் காலைப் புக்கெதிர்ப் பட்டுழிப்**

**பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்**

**வேளா ணெதிரும் விருந்தின்" (தொல் களவியல் நூற்பா 17)**என்று களவியலிலும்

**"விருந்தொடு நல்லவை வேண்டற்கண்ணும்" ( தொல். கற்பியல் நூற் 5)**

என்று கற்பியலிலும் அறியலாம். இல்லறத் தலைவியின் கடமைகளைக் கூறும்போது விருந்தோம்பல் பண்பாட்டையும் இணைத்து "விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்" (தொல். கற்பியல் நூற் 11) என்றும் கூறுகின்றார். சங்க ஆற்றுப்படை இலக்கியங்களில் பண்டைத் தமிழர் வாழ்வியலை, விருந்தோம்பும் பண்பினை விளக்கிக் காட்டுவதோடு, அழகியல் உணர்வோடு புலவர்கள் அவற்றைப் புனைந்து காட்டியதையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**திருமுருகாற்றுப்படை**

வேட்டைக்காரணமாகக் கொலைத் தொழிலைச் செய்கின்ற குறவர்கள் நீண்ட மூங்கில் குழாய்களில் ஊற்றி நெடுநாள் வைத்து முற்றி விளைந்த தேனால் ஆன கள்ளின் தெளிவை மலையிடத்திலுள்ள சிற்றூரில் வாழும் தம் சுற்றத்தாருடன் உண்டு மகிழ்ந்த செய்தியை,

**"கொடுந்தொழில் வல்வில் கொலைஇய கானவர்**

**நீடுஅமை விளைந்த தேக்கண் தேறல்**

**குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து" (திரு.முரு.ஆ.படை 194-196)**

என்ற அடிகளால் அறியலாம்.

**பொருநராற்றுப்படை (அரண்மனையில் விருந்து)**

தம் அரண்மனைக்கு வந்த மக்களுக்கு அரசர்கள் குழந்தைகளுக்கு உணவூட்டுவது போல பார்த்து பார்த்து முன்னிருந்து, விருப்பத்துடன் உணவளித்த உயர்ந்த உள்ளம் உடையவர்களாக இருந்தார்கள். சோழன் கரிகாற் பெருவளத்தான் தன்னை நாடி வந்த பொருநரை முகமலர்ச்சியோடு வரவேற்று அவர்களுக்குக் கொழுத்த செம்மறியாடின் பருத்த மேல் தொடையின் வெந்த இறைச்சியையும், சுடப்பட்ட கொழுத்த இறைச்சித் துண்டங்களையும் தின்னுங்கள் எனப் பலமுறையும் வற்புறுத்திக் கொடுத்தான். முல்லை முகைபோன்று வரியற்ற இடை முறியாத அரிசியால், விரல் போன்று நெடுகின அளவொத்த சோற்றையும், அவற்றோடு பருக்கைக் கற்கள் போன்று நன்கு பொரிக்கப்பட்ட கறிகளையும் இனிப்புச் சுவையுடைய உணவுகளையும், பிரியாவிடை பெறும் பொழுது இனிய குங்குமப்பூ மணக்கின்ற தேறல்பருகக் கொடுத்து விருந்தோம்பல் செய்தான் என்பதை,

**“துஞாஅய் துற்றிய துருவைஅம் புழுக்கின்**

**பராஅரை வேவை ‘பருகு’ எனத் தண்டி**

**-------------------------------------------------------------------------**

**உயிர்ப்பிடம் பெறாஅது ஊண் முனிந்து” (பொரு.ஆ.படை அடி 103-120)**

**“பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர” (பொரு.ஆ.படை அடி 157)**

என்ற அடிகளால் அறியலாம்.

**பெரும்பாணற்றுப்படை**

மக்கள் தங்களுக்குள் கொண்டிருக்கின்ற உறவு, விருந்து எனும் நிலைமை நாட்டு மன்னனிடமும் காணப்பட்டது என்பதை

**“மகமுறை மகமுறை நோக்கி, முகன் அமர்ந்து**

**ஆனா விருப்பின் தான் நின்ற ஊட்டி”. (பெரும். பா.ஆ.படை 478-479)**

என்ற அடிகளால் அறியலாம்.

தொண்டை நாட்டுத் தலைவனான இளந்திரையன் அரண்மனையில் சமையலில் வல்லோன் ஆக்கின பல இறைச்சி கொழுவிய தசைகளுடன், செந்நெல் சோற்றை வடித்து பாதுகாத்து வைக்கப்பட்ட இன்சுவையில் அமிழ்தத்தை ஒக்கும் உணவுகளும், கண்டோர் விரும்பும் முறைமைத்தாகிய மூடி வைத்த அடிசிலை விண்மீன் போன்ற வெள்ளிக் கலங்களில் முகம் மலர்ந்து பாணர்களை இனிமையாக உபசரித்து, அவனே முன் நின்று விருப்பத்துடன் உண்ணச் செய்தான் என்பதை

**“கொடுவாள் கதுவிய வடுஆழ் நோன்கை**

**வல்லோன் அட்ட பல்ஊன் கொழுங்குறை,**

**-------------------------------------------------------------------------**

**-------------------------------------------------------------------------**

**ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டி,**

**மங்குல் வானத்துத் திங்கள் ஏய்க்கும் (பெரும்பா.ஆ.படை அடி 471-480)**

என்ற அடிகளால் அறியலாம்.

**பெரும்பாணாற்றுப்படையில் விருந்து (பாலை)**

வெண்மையான பற்களையுடைய வேடர்குலப் பெண்கள் எறும்புகள் சேர்த்து வைத்த புல்லரிசியை வாரிக்கொண்டு வந்து உரலிலே இட்டு சிறிய வயிரம் பாய்ந்த உலக்கையால் அதைக்குற்றிக் கொழித்தெடுப்பார்கள். ஆழமான கிணற்றிலே கொஞ்சமாக ஊறியிருக்கின்ற உவர் நீரை முகந்து, பழைய விளிம்பு உடைந்து போன பானையிலே ஊற்றி அடுப்பிலே உலை வைப்பார்கள். குற்றியெடுத்த புல்லரிசியை உலையிலிட்டு அடுப்பு அணையாதபடி எரித்து சமைத்த சோற்றினை வந்த விருந்தினர்க்கும் கொடுத்து அவர்களும் உண்ட செய்தியை

**“நுண்புல் அடக்கிய வெண்பல் எயிற்றியர்**

**பார்வை யாத்த பறைதாள் விளவின்**

**-----------------------------------------------------**

**முரவுவாய்க் குழிசி முரிஅடுப்பு ஏற்றி,**

**வாராது அட்ட, வாடுஊன், புழுக்கல்” (பெரும்.பா.ஆ.ப 94-100)**

எனும் அடிகளால் அறியலாம்.

எயினர்கள் மேட்டு நிலத்தில் விளைந்த ஈச்சங்கொட்டை போன்ற நெல்லரிசிச் சோற்றை உடும்புப் பொரியலுடன் ஒன்று சேர்த்து உண்டதோடு இவ்வுணவையே விருந்தினர்க்கும் வேண்டுமளவு கொடுத்தார்கள் என்பதை

**“களர்வளர் ஈந்தின் காழ்கண் டன்ன,**

**கவல்விளை நெல்லின் செவ்அவிழ்ச் சொன்றி,**

**குமலி தந்த மனவுச்சூல் உடும்பின்**

**வறைகால் யாத்தது, வயின்தொறும் பெறுகுவீர்” (பெரும்.பா.ஆ.ப 130-133)**

என்ற அடிகளால் அறியலாம்.

**ஊழவர் விருந்து (முல்லை)**

தொண்டை மண்டலத்தில் நெல்விளைவு குறைவு. புன்செய் பயிர்கள் மிகுதி. வரகரிசிச் சோற்றைப் புழுக்கிய அவரைப் பருப்புடன் கலந்து பெருகிய சோற்றை தானும் உண்டு, வந்த விருந்தினர்க்கும் கொடுத்து மகிழ்ந்தனர் என்பதை

**“நெடுங்குரல் பூளைப் பூவின் அன்ன**

**குறுந்தாள் வரகின் குறள்அவிழ்ச் சொன்றி**

**புகர்இணர் வேங்கை வீகண் டன்ன,**

**அவரை வான்புழுக்கு அட்டி, பயில்வுற்று**

**இன்சுவை மூரல் பெறுகுவீர்”. (பெரும்.பா.ஆ.ப 192-196)**

என்ற அடிகளால் அறிந்து கொள்ள முடிகிறது.

**ஆயர் விருந்து**

இடையர்களுடைய உணவும் புன்செய் தானியங்கள் நண்டுக் குஞ்சுகளைப் போல காணப்படும் திணைச்சோறும், பாலும் அவர்கள் உட்கொள்வதுடன் இவ்வுணவையே விருந்தினர்க்கும் இட்டார்கள் என்பதை

**“மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேர்ப்பின்**

**இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப்பு அன்ன**

**பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவீர்” (பெரும்.பா.ஆ.ப 166-168)**

என்ற அடிகளால் அறியலாம்.

**பார்ப்பன விருந்து**

பார்ப்பனர்கள் காய்கறி உணவுகளையே உண்டனர். வளையலை அணிந்த கையினையுடைய பார்ப்பினி, பறவைப் பெயர் பெற்ற நெற்சோற்றையும், வெண்ணெயில் வெந்த மிளகுப் பொடியும், கறிவேப்பிலையும் கலந்து அட்ட மாதுளங்காய்ப் பொரியலையும், பசிய கொத்துக்களையுடைய மாமரத்தினது நறிய வடுவினைப் பல நாளாகப் போட்டு வைத்த ஊறுகாயோடும் வரும் விருந்தினர்க்கு இட்டு மகிழ்ந்தனர் என்பதை

**“வளைக்கை மகடூஉ வயின் அறிந்து அட்ட**

**சுடர்க்கடை, பறவைப் பெயர்ப்படு வத்தம்**

**சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்து**

**உருப்புற பசுங்காய்ப் போழொடு கறிகலந்து**

**கஞ்சக நறுமுறி அளைஇ, பைந்துணர்**

**நெடுமரக் கொக்கின் நறுவடி விதிர்த்த**

**தகைமாண் காடியின், வகைபடப் பெறுகுவீர்” (பெரும்.பா.ஆ.ப 304-310)**

பாடல் அடிகள் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

**வேளாளர் விருந்து**

சொந்த நிலமுள்ள உழவர்களான வேளாளர்கள் வீட்டுக்குச் சென்றால் பெரிய பலாப்பழம், இளநீர், வாழைக் கனிகள், பனைநுங்கு கிடைக்கும். சேப்பம் இலையுடன் முற்றிய நல்ல கிழங்குகளும் கிடைக்கும். இவைகளையெல்லாம் வீட்டிற்கு வரும் விருந்தினர்க்கு கொடுத்து மகிழ்ந்தனர்.

**"தண்டலை உழவர் தனிமனைச் சேப்பின்**

**தாழ்கோட் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம்**

**-------------------------------------------------------**

**தீம்பல் தாரம் முனையின் சேம்பின்**

**முளைப்புற முதிர் கிழங்கு ஆர்குவீர்" என்ற (பெரும்.பா.ஆ.படை-355-362)**

பாடல் அடிகளால் அறியலாம்.

**சிறுபாணாற்றுப்படையில் விருந்து (பாலை)**

எயிற்றியரால் சமைக்கப்பட்ட இனிய புளிக்களியையும் விரும்பத்தக்க சோற்றையும், ஆமானுடைய சூட்டிறைச்சியையும் விருந்தினர்க்கு அளித்து மகிழ்ந்தனர் என்பதை

**"எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு,**

**தேமா மேனிச் சில்வளை ஆயமொடு**

**ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவீர" (சிறு.பா.ஆ.ப அடி 175-177)**

என்ற அடிகளின் மூலம் அறியலாம்.

**மருதம்**

வைரம் பாய்ந்த உலக்கையின் இரும்புப்பூணால் குற்றியெடுத்த சிறந்த வெண்மையான சோற்றினை, கிளைத்த கால்களையுடைய நண்டோடு சேர்த்து சமைத்தக் கறியினை தொடியணிந்த கையினையுடைய பெண்ணொருத்தி வந்த விருந்தினருக்கு, அன்போடு அளித்த செய்தியை

**"இருங்காழ் உலக்கை இரும்புமுகம் தேய்த்த**

**அவைப்பு மாண்அரிசி அமலை வெண்சோறு**

**கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவிர்" (சிறு.பா.ஆ.ப 193-195)**

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

**மலைபடுகடாம் விருந்தோம்பல்**

தம் வீடு தேடி வந்தோர் யாவராயினும் அவர்களை உபசரிக்காமல் விடமாட்டார்கள் என்பதற்கிணங்க மலைகளில் வசித்துவரும் கூத்தர்களைக் கண்டால் அவர்கள் சேணிடை நடந்து வந்த வருத்தம் நீங்கும்படி இனிய மொழிகளைப் பேசி வரவேற்று அவர்களுக்கு மிகச் சொரிந்த நெய்யில் பொரித்து வெந்த பருத்த தசையையும், அழகிய தினையரிசிச் சோற்றையும் வழங்கி விருந்து படைத்தனர் என்பதை,

**"நும்இல் போல நில்லாது புக்கு,**

**கிழவிர் போலக் கேளாது கெழீஇ**

**சேட் புலம்பு அகல இனிய கூறி**

**பருஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு**

**குரூஉக்கள் இறடிப் பொம்மல் பெறுகுவீர்" (மலைபடுகடாம் 165-169)**

என்ற அடிகளால் அறியலாம்.

**முடிவுரை**

விருந்தோம்புவரின் செல்வம் நல்வழிப்படுதலால் மகிழ்ச்சியும் விளையும் அவன் செல்வமும் பெருகும். தொன்றுதொட்டு நிகழ்ந்து வரும் விருந்தோம்பல் பண்பாடு தமிழரின்

அடிப்படைப்பண்பாடாகும். பண்டையத் தமிழர்களுடைய உணவுமுறை ஒவ்வொரு நிலப்பகுதிக்கும் ஏற்ப மாறுபட்டு இருந்ததால் அந்தந்த நிலத்தைச் சார்ந்தவர்கள் தங்களை நாடி வரும் விருந்தினர்களுக்கு வெவ்வேறான உணவு வகைகளைத் தாங்களே தயாரித்து கொடுத்து உபசரித்தார்கள். ஆற்றுப்படையில் மன்னர்களைத் தவிர எயிற்றியர், எயினர், உழவர், ஆயர், பார்ப்பனர், வேளாளர், கூத்தர் ஆகிய இவர்களும் தம் இல்லத்திற்கு வரும் விருந்தினர்களுக்கு சைவம், அசைவம் என்ற இரு வகையான உணவுகளையும் கொடுத்து விருந்தினர் மனம் மகிழும்படி அன்போடு வழியனுப்பிய செய்தியைப் புலவர்களின் பாடல்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**துணைநின்ற நூல்கள்**


1. முனைவர் அ.மா.பரிமணம் & முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன் (பதிப்பாசிரியர்கள்) பத்துப்பாட்டு, சென்னை நியூ செஞ்சுரி புக் ஹஸ் (பி) லிட் முதல் பதிப்பு ஏப்ரல் 2004.
2. இளம்பூரணர், தொல்காப்பியம், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூல் பதிப்புக் கழகம் 1967.

# சங்க இலக்கிய அகப்பாடல்களில் அறச் சிந்தனைகள்

*முனைவர் ச.குருஞானாம்பிகா, உதவிப்பேராசிரியை - தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்.

**முன்னுரை**

அறத்தை அடிப்படையாகக் கொண்ட உயர்பண்புகள் அகவாழ்க்கை உயர்வடையக் காரணமாக இருக்கின்றன. இதனை பிற சங்க இலக்கிய அகப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன. களவு, கற்பு ஆகியவற்றைத் தனது பொதிவாக வைத்திருக்கிற அகப்பாடல்களில் மாந்தர்கள் வழியே பின்பற்றப்படுகின்ற வாழ்வியல் அறங்களை அறிவதே கட்டுரைப் பொருளாக அமைகின்றது.

**அருளறம்**

அருளும் அறநெறிகளுள் ஒன்றாக இல்லறத்தில் பின்பற்றப் பெற்றிருத்தலை அகப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன. அழியும் செல்வமாகிய பொருட்செல்வத்தைப் பண்டைத் தமிழர் செல்வமாகக் கருதவில்லை. பொருள் அழியும் இயல்பினது ஆதலால், **“பொருட்பணி”** (குறுந்-344:7)

என்றும் **“நில்லாப் பொருட்பணி”** (நற்-24:120)என்றும் பொருள் குறித்தனர்.

இங்கு அருளே துன்பத்தைத் துடைப்பதற்குரிய அறமாக வலியுறுத்தப்படுள்ளது. பிற உயிர்களின் துன்பத்தையும், தம்முடையது போலக் கருதிக் காத்தலே அறியுடையவரின் செயலாகும். அதுவே சான்றோரின் கடமையாக இருக்கிறது. இதனை,

**“பிறர்நோயும் தம்நோய் போல் போற்றி அறனறிதல்**

**சான்றவர்க்கு எல்லாம் கடன்”** (கலி-139:2-3)

என்று கலித்தொகை, பண்டைத் தமிழரின் அருளறத்தை விளக்குகின்றது.

இறைவனிடமும் அழியும் இயல்பினவாகிய பொன்னும், பொருளும், போகமும் வேண்டாது அருளும், அன்பும், அறமுமாகிய நிலையானவற்றையே பண்டைத் தமிழர் வேண்டினர்.

**“அன்னோர் அல்லது இன்னோர்**

**சேர்வார் ஆதலின், யா ஆம் இரப்பவை**

**பொருளும் பொன்னும் போகமும் அல்லநின்பால்**

**அருளும், அறனும், அன்பும் மூன்றும்”** (பரி-5:78-80)

என்று பரிபாடல் குறிப்பிடுகின்றது. **“அருளறச் செயின் நுமக்கறனுமா ரதுவே”** (கலி-140:37)

என்று கலித்தொகை அருளறத்தை வலியுறுத்துகின்றது.

**உயிர்களை நேசித்தல்**

எல்லா உயிர்களிடமும் இரக்கம் காட்டுவது பண்டைத் தமிழர்களின் பரம்பரைக்குணம். காரணமில்லாமல் எவ்வுயிர்க்கும் இன்னல் இழைக்கமாட்டார்கள். சிற்றுயிர்களுக்குக்கூட சிறுமைபுரியமாட்டார்கள். இந்த உண்மையை ஒரு நிகழ்ச்சியின் மூலம் விளக்கிக் காட்டுகிறது, நற்றிணைப்பாடல். ஒரு தலைவன் தேரின் மேல் ஏறிக்கொண்டு வருகின்றான். அத்தேர் கடற்கரையின் வழியே வந்து கொண்டிருக்கின்றது. அக்கடற்கரையிலே நண்டுகள் மேய்ந்து கொண்டிருக்கின்றன. தேரோட்டிவரும் பாகன், தேர்ச்சக்கரத்திலே அந்த நண்டுகள் அகப்பட்டு நசுங்காதபடிக்கு கவனத்துடன்

தேரை ஓட்டிக் கொண்டுவருகின்றான். இச்சமயத்திலே அவனுடைய செய்கைக்கு உதவியாக நிலவும் தோன்றியது. அலைகள் மோதுகின்றன. ஒளிபொருந்திய, மணல் நிறைந்த கடற்கரை. அந்தக் கரையிலே சக்கரங்களின் அடியிலே நண்டுகள் அகப்பட்டுக் கொள்ளாதபடி பாதுகாத்துக்கொண்டே, தேர்ப்பாகன் குதிரைகளின் வாரைப் பிடித்து இழுத்துக் கவனத்துடன் தேரை ஓட்டினான். இச்சமயத்தில் அக்கடற்கரையில் நிலவும் புறப்பட்டது.

**"புணரி பொருத பூமணல் அடைகரை**

**ஆழி மருங்கின் அலவன் ஓம்பி**

**வலவன் வன்பு ஆய்ந்து ஊர**

**நிலவு விரிந்தன்றால் கானலானே"** (நற்-11)

என்ற பாடல் அடிகளின் வழி பிற உயிர்களின் மேல் இரக்கம் கொள்ளுதலின் உயர்வு கூறப்படுகின்றது.

**அறம் உணர்த்தும் வாயில்கள்**

அகத்திணைப் பாடல்களில் உடன்பாடுச் சிந்தனைகளை ஒவ்வொரு நிகழ்விலும் கூறுபவர்களாக அகத்திணை மாந்தர்கள் விளங்கினர். நேரடியாக அறம் உணர்த்தியவர்களுள் தோழி, அறிவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். அவர்கள் வாழ்வியல் வழிமுறைகளை எடுத்துக்கூறி தலைவன், தலைவியின் இல்லறவாழ்வைச் செம்மையாக்குதற்கு விழைந்ததைச் சங்க இலக்கியம் விளக்கிக் காட்டுகின்றது.

நல்லவை உரைத்தலும், அல்லவை கடிதலும் அறிவர் பண்புகளாகும், உடன்போக்கினை மேற்கொண்ட செவிலியை ஆற்றுவிக்கும் முக்கோட்பகவரின் அறிவுரைகள் போற்றத் தக்கன. பெண்மகள் பெற்றோரை விட்டுப் பிரிதற்கு உரியவள். மலையில் பிறக்கும் சந்தனம், யாழில் பிறக்கும் இசை, கடலுள் தோன்றும் முத்து இவை முறையே பூசுபவர்க்கும், கேட்பவர்க்கும், அணிபவர்க்கும் பயன்படுவன. தாம் பிறக்கும் இடங்களுக்குப் பயன்படுவன அல்ல. அவைகளைப் போன்றே பெண்மகளும் பெற்றோருக்குப் பயன்படாள். தன்னை மணக்கும் தலைவனுக்கே பயன்படுவாள். இக்கருத்தினைக் கீழ்கண்ட கலித்தொகைப் பாடல் இயம்புகிறது.

**"காணோம் அல்லேம் கண்டனம் கடத்திடை**

**ஆண்எழில் அண்ணலோடு அருஞ்சுரம் முன்னிய**

**மாண் இழைமடவரல் காயிர்நீர்போறிர்**

**பலஉறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை**

**மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம் என் செய்யும்**

**நினையுங்கால் நும்மக்கள் நுமக்கும் ஆங்குஆனையாளே"** (கலி-9:9-11)

சமுதாய அமைப்பில் பெண்களின் வாழ்வு ஆண்களைச் சார்ந்திருப்பதாக அமைகிறது. பருவ வயதை அடைந்த பின் அவளுக்குரிய தலைவனைச் சேரும் போது தான் குடும்ப அமைப்பு உருவாகிறது. இதன் வாயிலாகச் சமூகத்திற்கு வேண்டிய அறப்பணிகளைச் செய்வதற்குக் காரணமாகக் கணவனும், மனைவியும் இணைந்த இல்லறவாழ்க்கை அவசியம். இதனை எடுத்துக்கூறி அகவாழ்க்கையை நெறிப்படுத்தும் சான்றோர்களாக அறிவர் திகழ்கின்றனர்.

தலைவன் தலைவியின் நல்வாழ்வினை எண்ணுகின்ற தோழி, உலகியல் அறிவும், சொல்லாற்றலும் மிக்கவள். தலைவனுக்கு அவ்வப்போது நன்னெறிகளை எடுத்துக்கூறி நன்னெறிப்படுத்துபவளாக தோழி விளங்குகிறாள்.

**"பொருள் தேடும் முயற்சியில் ஈடுபட்ட தலைவனைக் குறிப்பறிந்து விலக்கும் தோழி உலகம் படைத்த காலம் முதலாக பொருள் ஈட்டி வாழ விரும்புவோர், தம்மை அடைக்கலம் புகுந்தாரைக் காக்கவேண்டும் என்றும், அற நெறியை மறந்தனை என்றும் அறமுரைத்து விலக்குகின்றாள்"** (அகம்-5:16-17) தலைவி தலைவனையன்றி காப்புவேறு இல்லாதவள் என்றும் உணர்த்துகிறாள்.

**அறிவுரைத்தல்**

களவுவாழ்வில் தலைவிக்கும் சார்பாக இருக்கிறதோழி, தலைவனுக்கு அறிவுரை சொல்வதிலும் அறத்தையே வலியுறுத்தி அதனைத் தலைவன் மனம் உணரும் வகையில் உரைக்கிறாள். அறனும்,

பொருளும் வழாது நாடித் தம் தகுதிக்கு ஏற்ப முன்னியது முடித்தல் நன்மக்களது நல்லொழுக்கம் ஆகும். ஆகவே பெரியோரின் ஒழுக்கத்திற்கு மாறாக நடந்தால் இவ்வுலகில் அறம் நிலைபெறாது, இதனை,

**“அறமும் பொருளும் வழாமைநாடி**
**தற்தகவு உடைமை நோக்கி, மற்றுஅதன்**
**பின்ஆகும்மே, முன்னியது முடித்தல்**
**அனையெபெரியோர் ஒழுக்கம்”** (அகம்-286:10-13)

என்று அகநானூறு சான்று கூறுகிறது.

**ஆற்றுவித்தல்**

தலைவன் தலைவியின் வாழ்க்கைக்கு உறுதுணையாகிய தோழி, துன்பத்தினை நீக்க நல்வழிகாணும் சிறந்த நட்பினள். ஒழுக்கத்தில் ஏற்படும் இழுக்கம் நீக்கி நிலை நிற்க உதவும் ஊன்றுகோலாக, அறிவுரை கூறி அறநெறிப்படுத்தும் வழிகாட்டியாகத் திகழ்பவள்.

தலைவியை ஆற்றுவிக்கும் இடத்து,

**“உவக்காண் தோன்றும் குறும்பொறை நாடன்”** (அகம்-4:13)

என்றும்,

**“படரும் பையப் பெயரும்”** (குறுந்-5:1)

எனத் தலைவியின் துன்பம் நீங்குமாறு ஆறுதல் கூறுமிடத்தும்,

**“நீர் இல வைப்பின் சுரன்**
**இறந்தோரே”** (குறுந்-5:11)

என்று அருளாது பிரிந்தோற் பால் அஞ்சுதல், அறனற்றது எனத்தோழி, தலைவியிடம் அறிவுறுத்துவதாக அமைகிறது.

**அறத்தொடுநிற்றல்**

அறத்தொடுநிற்றல் என்பது, தமிழர்தம் வாழ்வில் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டநிகழ்வு. தலைவிக்குத் தலைவனுடன் களவில் இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த பின்னர், திருமணம் அவனுடந்தான் நிகழவேண்டும். தலைவனும், தலைவியும் பிறர் அறியாது களவுவாழ்வு நடத்திப்பின் கற்பு வாழ்க்கையாக மாற்றுதற்கு நெறிப்படுத்தும் துறையாக அறத்தொடு நிற்றல் அமைந்திருக்கிறது.

**அறமும், பொருளும்**

அன்பொடு கூடிய இல்லறம் பொருளின்றிச் சிறப்புப்பெறாது என்பதையும், அப்பொருளையும் அற வழியிலேயே ஈட்டுதல் வேண்டும் என்பதையும் அகப்பாடல்கள் வலியுறுத்துகின்றன. வாழ்க்கையில் நல்லசெயல்கள் செய்வதற்கும், பிறரிடம் இரந்து செல்லாது வாழ்வதற்கும் பொருள் தேவை என்பதனை,

**“அறன் கடைப் படாஅவாழ்க்கையும் என்றும்**
**பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும் பொருளினாகும்”**(அகம்-155:1-3)

என்றபாடலடிகள் கூறுகின்றன

**முடிவுரை**

களவு, கற்பு என்று இரு பிரிவுகளில் உள்ளடங்குகிற அகப்பொருளானது களவு வாழ்வில் தொடங்கி, கற்பு வாழ்வில் நிறைவுறுகிறது. அறம் உணர்த்தும் வாயில்கள் மூலமும், அருளுணர்வின் வழியாகவும் உயர்பண்புகளின் வாயிலாகவும் அறம் எடுத்துரைக்கப்படுகிறது.

# ரமணிசந்திரன் நாவலில் அறச்சிந்தனை

***த.ஆதிலெட்சுமி,** முனைவர் பட்ட ஆய்வாளர், சாராள் தக்கர் கல்லூரி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

**முன்னுரை**

நம் இலக்கியங்கள் 2000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. தமிழரின் அறச்சிந்தனை பார் போற்றும் சிறப்புடையது. பழந்தமிழ் இலக்கியங்கள் தமிழர் பண்பாட்டோடு அறச்சிந்தனையையும் பெருமையுறப் பறை சாற்றுகின்றன. தமிழர் பண்பாட்டையும், அறச்சிந்தனையையும் தனித்தனியே பிரித்துப் பார்க்க முடியாது. இவை நகமும் சதையும் போல. பெரும்பாலான இலக்கியங்கள் இவற்றைப் பின்பற்றும் விதமாகவே அமைந்து இருந்தது. ரமணிசந்திரனின் நாவல் குடும்ப உறவுகள் சிதையாமலும். பண்பாடு மற்றும் அறச்சிந்தனை மாறாமலும் செல்லக் கூடிய எழுத்து நடையைக் கொண்டது. அவ்வகையில் ரமணிசந்திரனின் **" அவள் ராஜா மகள் "**நாவலில் அமைந்துள்ள அறச்சிந்தனைகளை இக்கட்டுரை வழிக் காணலாம்.

**அறச்சிந்தனை**

நம் முன்னோர் பின்பற்றிய கொள்கை, கோட்பாடுகள், நோக்கம், இலட்சியங்கள், வாழ்க்கைமுறை, பழக்கவழக்கங்கள், சமூகம் சார்ந்த விஷயங்களான திருவிழா, உணவு, பொழுதுபோக்கு, விளையாட்டு, அகம், புறம் சார்ந்த விஷயங்களான களவு, கற்பு, மேலும் அரசியல், இலக்கியம் இவற்றை எல்லாம் உள்ளடக்கியதே சமுதாயவாழ்வு .

முன்னோரின் பண்பாட்டில் அறச்சிந்தனை நிறைந்து இருப்பதை நம் இலக்கியங்களிலும், நாடோடி இலக்கியங்களும், பழமொழிகளிலும், முதுமொழிகளிலும், இசை, நாட்டியம், நாடகம் போன்றவற்றிலும் ஓவியம், சிற்பம் போன்றவற்றின் வழியாக அறியமுடிகிறது.

**"அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனன்**

**மறத்தலின் ஊங்கில்லை கேடு " (திருக்குறள் 32)**

என்ற திருக்குறளிலும் அறச்சிந்தனை பற்றிக் காணலாம்.

**நாவல்(புதினம்)**

நவீன இலக்கியங்களில் உரைநடையைக் கொண்டு அமைவது புதினம் எனப்படுகிறது. உரைநடையில் எழுதப்பட்ட நெடுங்கதையை ஆங்கிலேயர் நாவல் என்பர். நாவல் என்னும் சொல் **"புதுமை"** என்ற அர்த்தத்தைத் தருகிறது. இத்தாலியில் **'நாவல்லா'** என்று அழைக்கப்பட்டு பின்னர் நாவல் என்று அழைக்கப்பட்டதாக ஆக்ஸ்போர்டு ஆங்கில இலக்கிய அகராதி கூறுகிறது. பலவித கிளைக்கதையை வளர்த்துக் கூறுவது புதினம் ஆகும்.

புதினம் எனும் உரைநடை இலக்கியத்தைப் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடுகையில்

**"பாட்டிடை வைத்த குறிப்பினாலும் பாவின்றி எழுந்த கிளவியானும்**

**பொருளோடு புணர்ந்த நகைமொழியானும்**

**பொருளோடு புணர்ந்த பொய்ம் மொழியானும்**

**உரைவகை நடையே நான்கென மொழிப"** (தொல்- செய்- 171)

பாவின்றி எழுந்த கிளவி எனறு ஆசிரியர் குறிப்பது உரைநடை நூல் ஆகும்.

**நாவல் கட்டமைப்பு**

கதை, பண்பாடு, சமுதாயம், கதைமாந்தர், உரையாடல் எனச் சிறந்த கட்டமைப்புடன் பொழுதுபோக்கிற்காக மட்டும் அல்லாமல் சிறந்த கருத்தை மக்கள் மனதில் பதிய செய்வதே புதினத்தின் கட்டமைப்பாகும்.

**நாவல் தோற்றம்**

நாவலின் தாயகம் இத்தாலி ஆகும். ஐரோப்பாவிலேயே செர்வேண்டிஸ் (1547- 1616) கிபி 16 ம் நூற்றாண்டில் எழுதிய **"டான் க்விக் சாட்"** நாவல் தான் முதல் நாவலாகக் கருதப்படுகிறது. ஆங்கில மொழியில் கி.பி. 17ம் நூற்றாண்டில் இறுதியில் வாழ்ந்த சாமுவேல் ரிச்சர் ட்ஸன் **"நாவல் இலக்கியத்தின் தந்தை"** எனப் போற்றப்படுகிறார்.

**எழுத்தாளர்**

எழுத்தாளர் என்பவர் கதை, கட்டுரை, திறனாய்வு, விளம்பரம் உள்ளிட்ட எழுத்துப்படைப்புகளை உருவாக்குபவர்கள் ஆவார்.

ரமணிசந்திரன் என்னும் பெண் எழுத்தாளர் 1970ம் ஆண்டில் தன்னுடைய எழுத்துப்பணியைத் தொடங்கியிருக்கிறார். அவருடைய எழுத்துப்பயணம் நாற்பத்தி எட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. நூற்றிஎண்பது நாவல்கள் வரை எழுதியிருக்கிறார்.

**ரமணிசந்திரன்**

1938 ல் ஜீலை 10ம் நாள் தூத்துக்குடி மாவட்டத்தில் திருச்செந்தூரில் திரு. கணேஷன்- கமல சுந்தர தேவிக்கு மகளாகப் பிறந்தார். இவரின் பெயர் ரமணி. கணவனின் பிற்பாதியான பெயர் சந்திரனை தன் பெயருடன் இணைத்து ரமணிசந்திரன் ஆனார். இவருக்கு ஒரு மகனும், மகளும் உள்ளனர்.

**"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்**

**சான்றோர் எனக் கேட்டதாய்" (திருக்குறள் 69)**

என்ற குறளுக்கு ஏற்ப பெற்றோருக்கு மட்டுமல்ல தன் குடும்பத்தினர் அனைவருக்கும் பெருமை சேர்க்கும் சிறந்த பெயரைப் பெற்றிருக்கிறார்.

இவருடைய நாவல் அனைத்தும் அருணோதயம் பதிப்பகத்தரால் வெளியிடப்படுகிறது வாசகர்களால் சிறந்த குடும்ப நாவலாகக் கருதப்படுகிறது.

**"இனிமையான"** முடிவுகளைத் தன் கதைகளில் தருவது இவரது சிறப்பாகும்.

**நாவல் காட்டும் அறச்சிந்தனை**

மனிதர்கள் சிந்திக்க தொடங்கிய போதே பண்பாடும் வளரத் தொடங்கியது. புண்பாடு வளர வளர மக்கள் மனதில் அறச்சிந்தனை வளரத் தொடங்கியது. படைப்பு என்பது அனுபவத்தின் வெளிப்பாடாகவே அமைகிறது. தன் அனுபவங்களை, கருத்துகளை, கேட்டவைகளைக் கற்பனை கலந்து சொல்லும் போது அதே அனுபவங்களைப் படிப்பவனும் பெற வாய்ப்புக் கிடைக்கிறது. முடிவு எடுக்க முடியாமல் தயங்கும் சூழ்நிலையில் ஒருவனுக்குப் படைப்புகள் முடிவு எடுக்க உதவுகிறது.

பொதுவாக நாவலில் ஆசிரியர் தான் சொல்ல விரும்பும் கருத்தைச் சில நிகழ்வுகளும், கற்பனைகளும் கலந்து சுவைப்பட சொல்லும் போது படிக்கும் மக்களை எளிதாக சென்று அடைகிறது.

ஆசிரியர் இக்கதையில் வாழ்க்கை துணை நலம் , இல்வாழ்க்கை பற்றியும் அன்புடமை, இனியவை பேசுதல், வாய்மை போன்ற அறச்சிந்தனை சார்ந்த விஷயங்களை மக்களுக்குத்

தெரியப்படுத்துகிறார். பண்பாடு சார்ந்த அறச்சிந்தனை , சமுதாயச்சிந்தனை போன்றவற்றைத் தன் கதைகளில் தருவது இவருடைய சிறப்பு.

**வாழ்க்கைத் துணை நலம்**

வாழ்க்கைத் துணையோடு வாழ்தலே எல்லாவற்றிலும் சிறந்தது என்கிறார் வள்ளுவர் . துணையாக நிற்கும் நபர் சிறப்பாக அமைந்துவிட்டால் வளம் பல கிடைத்துவிடும் . இக்கதையில் நாயகனின் பெற்றவர்களைப் பற்றிக் கூறும் இடங்களிலும் , நாயகியின் பெற்றவர்களைப் பற்றிக் கூறும் போதும் இருவரின் அன்னையரின் குணங்களுமே சிறப்புடையதாகக் காட்டப்பட்டுள்ளது. அவர் அவர்களின் நிலைக்கு ஏற்ப அவர்களின் குணம் சிறிது மாறுபட்டாலும் அவர்களின் தகுதிக்கு ஏற்ப சரியானவையாகக் கொள்ளப்படுகிறது.

**"மனைத்தக்க மாண்புடையாள் ஆகித்தற் கொண்டான்**

**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" (திருக்குறள் 51)**

என்ற வள்ளுவரின் கருத்தோடு ஒத்து நோக்க முடிகிறது.

**இல்வாழ்க்கை**

குடும்பத்தில் வாழும் வாழ்க்கையைப் பற்றி ஆசிரியர் இக்கதையில் அழகான குடும்பச் சூழ்நிலையைக் கொண்டு காட்டியிருக்கிறார். தனி மனிதனின் வாழ்க்கை என்பது குடும்பமாகும் போது நிறைவு பெறுகிறது. இதையே நாயகியின் குடும்பச் சூழல் , நாயகனின் குடும்பச் சூழல் கொண்டு அழகுற விளக்குகிறார்.

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது " ( திருக்குறள் 45)**

எனும் திருக்குறளோடு ஒப்பிட்டு காணமுடிகிறது.

**அன்புடமை**

ஒருவர் அன்பானவராக இருந்தால், அவரால் இரக்கத்தை மறைக்க முடியாது. தனக்கென்று எதையும் வைத்துக் கொள்ளாமல் தன் உயிரையும் அடுத்தவருக்காகத் தரக்கூடியவராக இருப்பர். அப்படிப்பட்ட சிறந்த பண்பு உடையவராக நாயகியின் தந்தை கதாப்பாத்திரம் இருப்பார் . நாயகி இரண்டு வயதில் இருந்து எடுத்து வளர்க்கப் பட்ட பெண். நாயகிக்குத் திருமணம் பேசும் சமயம் வேறு வழியின்றி உண்மையைத் தெரியப்படுத்துவார். எந்தச் சூழலிலும் நீ தான் எங்களுடைய மூத்த மகள் என்று சொல்லுவதாகக் கதையில் காட்டியிருப்பார். இதை

**"அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**

**நண்பென்னும் நாடாச்சிறப்பு" (திருக்குறள் 74)**

என்ற வள்ளுவரின் வாக்கோடு ஒத்துநோக்க முடிகிறது.

**இனியவை பேசுதல்**

எந்தச் சூழலிலும் மற்றவர் மனம் நோகாமல் பேசுவது சிறந்த பண்பு ஆகக் கருதப்படுகிறது. அக்கருத்தை நாயகி மூலம் ஆசிரியர் தெரியப்படுத்துகிறார். வேலையை காரணமாக கொண்டு தான் பிறந்த குடும்பத்தைக் கண்டறிய செல்கிறாள் நாயகி. அவ்விடத்தில் பெரிய வீட்டின் பேத்தியாக வரும் பெண் , நாயகியை அவதூறாகப் பேசும் சமயத்திலும் சரி, அந்த வீட்டில் உள்ள அனைவரிடமும் பேசும் போதும் நாயகி தன் இனிமையான சொல் மாறாமல், மற்றவர்கள் மனம் வேதனையடையாமல் இனிமையுற பேசுகிறாள். இதை வள்ளுவரின்

**"முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி அகத்தானாம்**

**இன்சொ லினதே அறம்" (திருக்குறள் 93)**

என்ற குறளின் பொருளோடு ஒத்துப்போவதைக் காணமுடிகிறது.

**வாய்மை**

நாயகி தன் பிறந்த குடும்பத்தைக் கண்டுபிடிக்கும் முன் அவளை யார் என்று அடையாளம் காணும் அவளுடைய சித்தப்பா, அவளைத் தனியே அழைத்துச் சென்று தாய், தந்தையை விபத்தில் இழந்து நின்ற இரண்டு வயது குழந்தையைக் குடும்பத்துடன் சேர விடாமல் பிரித்த காரணத்தைக் கூறி மன்னிப்பு கேட்பார்

**"மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**

**தானஞ்செய் வாரின் தலை" ( திருக்குறள் 295)**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க சித்தப்பா கதாப்பாத்திரம் இருப்பதைக் காணமுடிகிறது.

**முடிவுரை**

உலகோர் போற்றும் சிறப்புடைய நம் வாழ்க்கை முறை அறச்சிந்தனைகளை உள்ளடக்கியே அமைந்துள்ளது. அதை நம் வருங்கால சந்ததிகளும் பின்பற்றும் வகையிலேயே எழுத்தாளரும் தன்னுடைய நாவலில் பதிவிடுகிறார்.

மனிதனின் அறச்சிந்தனையே அவனைச் சிறந்த பண்பாளனாகவும் , சிறந்த மனிதனாகவும் உயர்த்துகிறது. எழுத்தாளர் தான் கூற விரும்பும் கருத்துகளைத் திருக்குறளின் கருத்துக்களோடு ஒத்துப்போவதைப் போலவே கூறுகிறார். அவருடைய கதைகளில் மக்களுக்குத் தேவையான பண்பாடு, அறச்சிந்தனை , வாழ்க்கை நெறிமுறைகளைத் எதொகுத்துக் கூறுவதே இவருடைய சிறப்பு.

**துணை நூற்பாட்டியல்**


1. **அவள் ராஜா மகள்**

   ரமணிசந்திரன்

   அருணோதயம்

   இராயப்பேட்டை

   சென்னை -600014

2. **தொல்காப்பியம் உரையும்மூலமும்**

   உரைவிளக்கம் ஞா.மாணிக்கவாசன்

   உமா பதிப்பகம்
   சென்னை- 600001

3. **திருக்குறள் மூலமும் உரையும்**

   வ.சுப. மாணிக்கனார்
   சாரதா பதிப்பகம்
   சென்னை-600014

# சங்க இலக்கிய எட்டுத் தொகையில் அறம்

***முனைவர் பு.எழிலரசி,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத் துறை, செயின்ட் ஜோசப் மகளிர்கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஓசூர் – 635 126.

**முன்னுரை**

பண்டைத் தமிழ் நாகரீகத்தினையும், சிறந்த சிந்தனையின் ஊற்றாகவும் விளங்குவது சங்க இலக்கியங்களே. அத்தகைய சங்க இலக்கியங்களை மூன்றாகப் பகுத்தனர் நம் முன்னோர்கள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு,பதினெண்கீழக்கணக்கு. இவற்றில் முன்னிரண்டும் சங்க காலத்தது, மற்றொன்று சங்கம் மருவிய காலத்தது.

**'கல் தோன்றி மண்தோன்றா காலத்தே**

**முன் தோன்றியது நம் மூத்தத் தமிழ்குடி'**

என்னும் கூற்றிலிருந்து நம் தமிழ் மொழியானது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியிருத்தல் வேண்டும். பண்டைக்காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் சாதி மத பேதமின்றி வாழ்ந்தனர் என்பதற்கு அடையாளம், அவர்கள் அகம் புறம் என்று பிரித்துக் கொண்டு ஆங்காங்கே குழுக்களாக வாழ்ந்து வந்தனர். அதன் பின் தாங்கள் வாழ்ந்து வந்த இடங்களை ஐந்திணைகளாகப் பகுத்துக் கொண்டு வாழ்ந்தனர். திணை என்றால் ஒழுக்கம் என்பது பொருள். அதற்கேற்ப சங்கத் தமிழர்கள் புறவொழுக்கத்தோடு அக வொழுக்கத்தையும் கடைபிடித்து 'ஒருவனுக்கு ஒருத்தி' என்னும் பண்பாடு மாறாமல் வாழ்ந்து வந்தனர். அத்தகைய அறவொழுக்கத்தினைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**நற்றிணையில் அறம்**

தலைவி தலைவனிடத்து குறையே கண்டாலும், அக்குறையை வெளிப்படையாகக் கூறாமல் நயமாக தோழியிடம் கூறுகிறாள்.

**"பகல் எரி சுடரின் மேனி சாயவும்,**

**பாம்பு ஊர் மதியின் நுதல் ஒளி கரப்பவும்**

**எனக்கு நீ உரையாயாயினை: நினக்கு யான்**

**உயிர் பகுத்தனன் மாண்பினன் ஆகலின்"**[1]

குறிஞ்சித் திணையில் தோழிக்கு தலைவி அறத்தோடு நிற்றல் என்னும் துறையில் அமைந்துள்ளது இப்பாடல். பாங்கியற் கூட்டத்தில் தலைமகளின் குறையைத் தீர்ப்பதற்கு தோழி முற்படுகின்றாள். ஆதனால் அவள் தலைவியிடம் 'நின் மேனி வாடிற்று: நெற்றி ஒளி குன்றிற்று ஆனால் அவற்றின் காரணத்தை நீ உரைக்கவில்லை. ஆயினும் நான் அறிவேன் என்கிறாள். ஆதற்குத் தலைவி அதற்காக நீ வருத்தப்படாதே தினைப்புனத்தில் தலைவன் என் முதுகை அணைத்தான் அதனால் அவ்வாறு இருக்கிறேன் என்று தோழியிடம் நயமாகக் கூறி தன் ஒழுக்கம் குன்றாதவாறு அறத்தோடு நிற்கின்றாள்.

தலைவன் பரத்தையிற் பிரிந்து சென்றாலும் தலைவியின் மேல் கொண்ட காதலால் தலைவியிடம் சேர நினைக்கின்றான். அப்பொழுது தலைவி ஏற்றுக் கொள்ள மாட்டாளோ என்று பயந்து விருந்தினனை வீட்டிற்கு அழைத்து வருகின்றான்.

**"தடமருப்பு எருமை மடநடைக் குழவி**

**தூண் தொறும் யாத்த கான் தகு நல் இல்,**

**கொடுங்குழைப் பெய்த செழுஞுசெய் பேழை**

**சிறுதாழ் குழை பெய்த மெல் விரல் சேப்ப"[2]**

தன் கைகள் சிவக்க தலைவி அட்டில் சமைக்கிறாள். தலைவன் விருந்தொடு வருகின்றான். தலைவன் மீது இருக்கும் கோபத்தை விருந்தினர் முன் காட்டக் கூடாது என்பதற்காக தலைவி தன் அழகிய முல்லை போன்ற எயிறு காட்டி சிரிக்கின்றாள். தன் குடும்பத்தில் நடப்பது பிறருக்கு தெரியக் கூடாது என்பதற்காக தலைவி அவ்வாறு நடந்து கொள்கின்றாள்.

**குறுந்தொகையில் அறம்**

குறுகிய அடிகளை உடையதாயினும் வாழ்க்கைக்குத் தேவையான செறிந்தக் கருத்துக்களை தருவதனால் சங்க இலக்கியத்தில் குறுந்தொகையை 'நல்ல குறுந்தொகை' என்று கூறினர் சங்கத் தமிழர். குறிஞ்சி நிலத்தில் வாழும் குரங்குகள் கூட பிரிவினைத் தாங்காது அப்படிப்பட்ட இரவுப் பொழுதில் தலைவன் தலைவியை சந்திக்க நினைப்பது தவறு என தோழித் தலைவிக்கு மறுப்பு தெரிவிப்பதிலிருந்து அவர்களின் ஒழுக்கம் இங்கு புலப்படுகிறது.

**"கருங்கட் தாக்கலை பெரும் பிறிது உற்றென,**

**கைம்மை உய்யாக் காமர் மந்தி**

**கல்லா வன் பறழ் கிளைமுதல் சேர்த்தி,**

**ஓங்குவரை அடுக்கத்து பாய்ந்து – உயிர் செகுக்கும்**

**சாரல் நாட! நடுநாள்**

**வாரல்: வழியோ! வருந்தும் யாமே!"[3]**

இருளில் தாவுதலையுடைய ஆண் குரங்கு, சாவினை அடைந்ததாக,கணவன் இல்லாமல் வருந்தும் கைம்மை வாழ்வினை பொறாது, தன் கணவனால் விரும்பப்பட்ட பெண் குரங்கு, தன் தொழிலை இனிக் கற்க வேண்டாத தன்னுடையக் குட்டிகளை சுற்றத்தாரிடம் அடைக்கலப்படுத்தி, உயர்நத மலைப்பக்கத்தின் உச்சியிலிருந்து கீழே விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ளும். விலங்குகள் கூட அறத்தொடு நிற்கும் நாட்டுக்குத் தலைவனே இரவுக்குறியில் தலைவியை சந்திப்பது தவறல்லவா? ஏன்று தலைவனிடம் மறுத்துக் கூறுகிறாள்.

தன் தாய் வீட்டில் பாலும் சோறும் உண்டத் தலைவி, தன் கணவன் வீட்டில் நடந்து கொள்ளும் விதம் நம் தமிழர் பண்பாட்டின் உயர்வினை விளக்கிக்அ காட்டுகிறது.

**"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்,**

**கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ**

**குவளை உண்கண் குய்ப்புகைக் கழுமத்**

**தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்**

**இனிது' எனக் கணவன் உண்டலின்**

**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒன்னுதல் முகனே"[4]**

தலைவி இல்லறம் நிகழ்த்தும் சிறப்பினை நேரில் கண்டறிந்து வந்த செவிலித்தாய் நற்றாய்க்கு உரைப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது. தலைவியின் அடிசில் ஆக்கும் திறமும் தலைவனின் அன்போடு இயைந்த பாராட்டு மொழிகளும் அப்புகழ் மொழிகளால் தலைவி செருக்கு கொள்ளாது அகத்தே மகிழும் அரிய பண்பு செவிலியால் கண்டறியப்பட்டது தெற்றென விளங்கும்.

**ஐங்குநூற்றில் அறம்**

தலைவன தலைவியை மணந்து கொள்வேன் என்று உறுதி கூறி தலைவன் பொருள் தேட செல்வதும், தோழி தாயிடம் வந்து அறத்தொடு நிற்றலும் 'அஞ்சாதே' தலைவன் திரும்புவான் இது உறுதி என தோழி தாயிடம் உரைக்கின்றாள்

**"அன்னை, வாழி! வேண்டு அன்னை!புன்னையொடு**

**ஞாழல் பூக்கும் தண்ணந் துறைவன்**

**இவட்கு அமைந்ததனால் தானே**

**துனக்கு அமைந்தன்று, இவன் மாமைக் கவினே"**[5]

தலைவியின் கற்புக்கு எவ்வித பங்கமும் நேரவில்லை. தலைவன் தலைவியை கைவிடான் இனி தலைவனுக்கே உரியது என எடுத்துக் கூறுகிறாள்.

வினையின் காரணமாக நீங்கிச் செல்லும் தலைவன் தான் வருவதாக கூறிச் சென்ற கார்ப்பருவம் வருவதற்கு முன்னதாக வந்தமையை,

**"ஆர் குரல் எழிலி அழி துளி சிதறிக்**

**கார் தொடங்கின்றால், காமர் புறவே**

**வீழ்தரு புதுப்புனல் ஆடுகம்**

**தாழ் இருங்கூந்தல்! வம்மதி விரைந்தே"**[6]

கார் பருவத்தில் சொல்லச் சென்றான் தலைவன். ஆனால் அதன் வரவுக்கு முன்னரே வந்தான். தன் காதலியோடு புறவிற்குச் சென்றான் அப்பொழுது கார்பருவம் வந்தது அது கண்டு மகிழ்ந்து, தான் முன்னரே வந்தமைத் தோன்றக் காதலியிடம் இவ்வாறு கூறினான். தலைவன் சொன்ன சொல் தவறாமல் நடந்து கொண்ட முறை இப்பாடலின் வழி அறியப்படுகிறது.

**அகம் கூறும் அறம்**

பொருள் தேடச் சென்றத் தலைமகன் இடையில் தலைவி நினைவு வர தன் நெஞ்சை ஆற்றுப்படுத்துகிறான் .

**"அகல்வாய் வானம் மால் இருள் பரப்ப,**

**பகல் ஆற்றுப்படுத்த பையென் தோற்றமொடு**

**சினவல் போகி புன்கண் மாலை,**

**அந்த நடுகல் ஆள் என உதைத்த**

**கான யானை கதுவாய் வள் உகிர்"**[7]

காடடு யானையானது பாலை வழியில் உள்ள நடுகல்லை ஆள் என நினைத்த உதைத்தமையால் வளவிய பெருநகம் சிதைவுற்று பனை நுங்கின் தோடு போல முறிந்து வீழும் அருளிலாக் கொடுமையுடைய ஆரலைக் கள்வர் கொள்ளைக் கொள்வதற்குப் பதுங்கிக் கிடக்கும் இடத்தே காட்டின் கொடுமையால் வருவார் போவார் இன்மையால் தம் வறுமையை நீக்குவாரைக் காணமாட்டாத இடமான கொடிய சுரவழி அம்மாலைக் காலத்தே நின்று தலைவியை நினைத்துத் தலைவன் வருந்துகின்றான்.

குடும்ப வாழ்க்கையில் மட்டுமன்றி, அரசியலிலும் மக்களைப் பேணிக்காப்பதிலும் தமிழர்க்கு நிகர் தமிழர்தான் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. அதில் புறநானூறு பண்டைத் தமிழகத்தின் அரிய வரலாற்றுத் தொகுப்பு பண்பாட்டுக் களஞ்சியம், இலக்கியக் கருவூலம் இதனுள் தமிழகத்தின் கோநகரங்கள், துறைமுகங்கள், மலைகள், ஆறுகள், கடற்கரைகள், காடுகள் பற்றிய செய்திகளைப் பற்றி, புரவலர்கள் புலவர்களை போற்றி அவர்களின் அறிவுரைகளைச் செவிமடுத்து ஒழுகிய சிறப்புகளும், மன்னர் தம் மானப் பண்பு பற்றிய அரிய குறிப்புகளும் போர்த் திணவுற்று அறமுறைப் பிறழாது போர் புரிந்து, மார்பில் வேலேற்ற மைந்துடை காளையரின் வீரப் பெருமைகளும், மூவேந்தரின் குடிமை முதலான சால்புகளும், களச்சாவுற்ற தம் மைந்தரின் உடல் கண்டு பெருமிதமெய்திய

தாயரின் மறக்குணங்கள் இன்ன பிறவும் புறநானூற்றில் மிக அழகுற எடுத்துரைக்ப் பெறுகின்றன. அதுமட்டுமல்லாமல் போருக்குச் செல்லும் அரசர்களுஞ் அறத்தோடு நடந்துகொள்ளும் முறைமை இங்கு குறிப்பிடத் தக்கது.

**"ஆவும், ஆன் இயற் பார்ப்பன மாக்களும்**

**பெண்டிரும் பிணியுடையீரும், பேணி, பேணித்**

**தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**

**பொன் பொல் புதல்வர் பெறாஅதீரும்,**

**எம் அம்பு கடி விடுதும், நும் அரண் சோமின் என"[8]**

இப்பாடலில்' அறத்தின் நெறியின்படி பெருவழுதியின் இயல்பினை கூறுகிறார்.

**முடிவுரை**

இவ்வாறாக சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்கள் மக்களின் வாழ்க்கையை தெற்றென விளக்கும் கருத்துக் கவூலங்களாக விளங்குகின்றன. 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போல் எட்டுத்தொகையில் அகம் புறம் இவை இரண்டிலும் திணை பிரித்து அதற்கேற்ப மக்கள் வாழ்ந்தனர். அகத்திணை அன்பின் ஐந்திணையில் மனையியல் வாழ்க்கைப் பற்றியும், புறத்திணையை பன்னிரெண்டாகப் பிரித்து அரசியல் வாழ்க்கையையும் விளக்கி மனிதன் இப்படித்தான் வாழவேண்டும் என்னும் அறச்சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்தள்ளது போற்றுதற்குரியது.

**சான்றெண் விளக்கம்**

1. நற்றிணை, பா.எண் 128
2. மேலது, பா.எண் 120
3. குறுந்தொகை, , பா.எண் 69
4. மேலது, , பா.எண் 167
5. ஐங்குறுநூறு, , பா.எண் 103
6. மேலது, , பா.எண் 42
7. அகநாநூறு, , பா.எண் 365
8. புறநாநூறு, பா.எண் 9